இதில் பேருந்து ஓட்டுனர் சரவணக்குமார், நடத்துனர் செல்லத்துரை,லாரி ஓட்டுனர் பெரியசாமி, பெண்கள் உள்ளிட்ட பயணிகள் முருகேசன் 50,,ஆதம்மை 70,இந்திரா உட்பட 12 பேர் மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

லேசான காயமடைந்த மூன்று பேர் முதலுதவி சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

தேசிய நெடுஞ்சாலை 6 கிலோ மீட்டர் அருகில் உள்ள நிலையில் அடிக்கடி வாகன விபத்து ஏற்பட்டு அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் விபத்தில் சிக்கியவர்கள் நாடும் அவல நிலை உள்ளது இந்நிலையில் நேற்று ஒரே நேரத்தில் காயம்பட்டவர்கள் சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதால் டூட்டி டாக்டர் மட்டும் இருந்த காரணத்தினால் போதிய மருத்துவர்கள் இன்றி நோயாளிகள் தவிப்புக்கு உள்ளாகினர்.



தி.மு.க. பிரமுகர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட நபர்கள்.

### தி.மு.க. பிரமுகரை கொன்ற வழக்கில்

# நிலக்கோட்டை கோர்ட்டில் மேலும் ஒருவர் சரண்

திண்டுக்கல் நவ.7

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் அருகே உள்ள நாகையகவுண்டன்பட்டி கிராமத்தைச்சேர்ந்ததிமுக பிரமுகர் லட்சுமணன் (52) என்பவரை இருசக்கர வாகனத்தில்சென்று கொண்டிருந்த போது நேற்று முன் தினம் ஒரு கும்பல் வெட்டி கொலை செய்தது

இதுகுறித்து வழக்கு பதிவு செய்த அம்மையநாயக்கனூர் போலீசார் கொலையாளிகளைதனிப் படை அமைத்து தேடி வந்தனர்.

இந்த தனிப்படையினர் சம்பவம் நடந்த சில மணி நேரத்திற்குள்ளாக கொலையாளிகள் மூக்கையா என்ற பிச்சைமுத்து (30), கலைஞர் என்ற ரஞ்சித்குமார் (30) மற்றும் வாசுதேவன் (23) ஆகியோரை கைது செய்தனர்.

விசாரணையில் நாகையகவுண்டன்பட்டி கிராமத்தில் வசித்து வரும் லட்சுமணன் (52), மற்றும் மீனாட்சிபுரம் கிராமத்தில் வசித்து வரும் அஜித்குமார் (26), ஆகிய இருவரும் 02.11.2026 அன்று மாலை 07.00 மணியளவில் கொடைரோட்டில் அமைந்துள்ள தனியார் ஓட்டல் ஒன்றில் இரவு உணவு அருந்தியதாகவும், அப்போது இவர்கள் சாப்பிட்ட இடத்தின் டேபிளுக்குகீழே பணம் ரூபாய். 25,000/ கிடந்ததை அஜித் எடுத்துள்ளார்.

அப்போது அந்த பணத்தை லட்சுமணன் அஜித்திடமிருந்து அந்த பணத்தை யாருடையது என்று விசாரித்து கொடுத்துவிடலாமென்று வாங்கி சென்றுள்ளார்.

மறுநாள் 03.11.2026 ஆம் தேதி அஜித் லட்சுமணனிடம் தான் கொடுத்த பணத்தை கொடுக்குமாறு கேட்டு வீட்டிற்கு சென்ற தாகவும், அங்கிருந்த லட்சுமணன், மகன் உதயகுமார் ஆகியோர் சேர்ந்து அஜீத்தை பணம் கொடுக்க முடியாது என்று சொல்லி அடித்து அனுப்பியதாகவும், இதனால் ஆத்திரமடைந்த அஜீத்குமார் பணத்தை திரும்ப தராத லட்சுமணனை தன்னுடைய நண்பர்களான 1) மூக்கையா என்ற பிச்சைமுத்து (30), த.பெ. செல்வம், கே. மீனாட்சிபுரம், 2) கலைஞர் என்ற ரஞ்சித்குமார் (30), த.பெ. ராமர், ஜல்லிபட்டி, 3) வாசுதேவன் (23), த.பெ. மொட்டையாண்டி, கே. மீனாட்சிபுரம்ஆகியோர்மூலமாக கொலை செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டி லட்சுமணனை காட்டுநாயக்கன்பட்டி சின்னாளபட்டி சாலையில் வைத்து வழிமறித்து அருவாளால் வெட்டி கொலை செய்ததாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில நேற்று 05.11.2026 ஆம் தேதி எதிரியான அஜீத்குமார் (26) நிலக்கோட்டை குற்றவியல்நீதிமன்றத்தில் சரணடைந்த. இதனைத் தொடர்ந்து கொலையாளிகள் நான்கு பேரையும் போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

### திண்டுக்கல் அருகே

# வியாபாரி கொலை வழக்கில் 6 பேர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பு

## கலெக்டர் உத்தரவால் நடவடிக்கை

திண்டுக்கல் நவ.7

திண்டுக்கல் நத்தம் சாலையில் உள்ள சாணார்பட்டி காவல் நிலையத்திற்கு கையெழுத்து இட சென்ற மேட்டுப்பட்டியைச் சேர்ந்த வீரபத்திரன் என்ற முறுக்கு வியாபாரியை அக்டோபர் 6 அன்று ஒரு கும்பல் வெட்டிக் கொலை செய்தது.

இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த சாணார்பட்டி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வந்தனர். இக்கொலை வழக்கில் தொடர்புடைய 16 நபர்களை சாணார்பட்டி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்

இந்த கொலை வழக்கில் தொடர்புடைய முக்கிய நபர்களான ராஜசேகர், (31), தேவரூபன் டொனால்டோ (24), 3) நவீன்குமார்(20), ஆரோக்கிய ஜெட்லி (26).

லிட்டில் பிரின்ஸ்ராஜ் (26), மற்றும் 6) ராஜா(45), ஆகிய 6 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்ததின் பேரில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, 6குற்றவாளிகளையும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டார். ஆட்சியரின் உத்தரவின் பேரில்,

6 பேரும் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர்.




### தீபாவளியை முன்னிட்டு வேடசந்தூர் அருகே

# களை கட்டிய ஆட்டுச்சந்தை

## ரூ.5 கோடிக்கு ஆடு, கோழிகள் விற்பனை

திண்டுக்கல் நவ.7

தீதிண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள அய்யலூரில் வாரம் தோறும் வியாழக்கிழமையன்று ஆடு மற்றும் கோழி சந்தை நடைபெறும். திண்டுக்கல் மாவட்டத்தில் புகழ்பெற்ற சந்தையாக அய்யலூர் ஆட்டுச்சந்தை திகழ்கிறது.

சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் திண்டுக்கல் மட்டுமின்றி மதுரை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளும் ஆடு மற்றும் கோழிகளை மொத்தமாக விலைக்கு வாங்க அதிக அளவில் அய்யலூர் சந்தைக்கு வருகின்றனர்.

இந்த நிலையில் வருகிற 8ம் தேதி தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் அய்யலூரில் ஆட்டுச் சந்தை கூடியது.

நேற்று இரவு முதல் ஏராளமான விவசாயிகளும் வியாபாரிகளும் சந்தையில் குவிந்தனர். இதனால் விற்பனை களை கட்டியது. கடும் கூட்ட நெரிசலும் ஏற்பட்டது. சந்தைக்குள் இடம் போதாததால் சந்தைக்கு வெளியே சர்வீஸ் சாலை முழுவதிலும் கூட்டம் அலைமோதியது.

வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஆடு மற்றும் கோழிகளை வாங்கி 700க்கும் மேற்பட்ட வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

இன்று 10 கிலோ எடையுள்ள வெள்ளாடு 10,000 ரூபாய் வரையிலும், செம்மறி ஆடு 9,000 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ நாட்டுக்கோழி ரூபாய் 450 முதல் 500 வரையிலும், சண்டைக்கு பயன்படும் கட்டு சேவல் அதிகபட்சமாக 15,000 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

வியாபாரிகள் சேவல் களை சண்டையிட வாங்கி சென்றனர்.

அய்யலூர் சந்தையில் நேற்று ஒரே நாளில் மட்டும் 5 கோடி ரூபாய்க்கு ஆடு மற்றும் கோழிகள் விற்பனை நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஆடு மற்றும் கோழிகளுக்கு நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# வெற்றி சிறப்பு காய்கறி தொகுப்பு விற்பனை செய்யும் இடங்கள் விவரம்

## மதுரை மண்டல இணைப்பதிவாளர் தகவல்

மதுரை, நவ.7

தீபாவளி பண்டிகையை பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் அன்றாட சமையலுக்குத் தேவையான அத்தியாவசிய காய்கறிகள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் நோக்கில், 10 வகையான காய்கறிகள் அடங்கிய "வெற்றி சிறப்பு காய்கறி தொகுப்பு ஒன்று ரூ.100 என்ற சலுகை விலையில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்.

தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலை கள் மற்றும் கூட்டுறவுப் பண்டக சாலைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் மூலம்நுகர்வோருக்கு விற்பனை செய்ய கூட்டுறவுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம்

நவ.5 முதல் நவ.7 வரை நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட உள்ளது.

ஒவ்வொரு தொகுப்பின் மீதும் காய்கறிகளின் விபரம், எடை மற்றும் "விற்பனை விலை ரூ.100/மட்டும் " என்ற முத்திரை இடப்பட்டிருக்கும்.

விற்பனை நிலையத்தின் பெயர், முகவரி, கைப்பேசி எண்: ஏ.1437, பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் செக்கானூரணி கூட்டுறவு சுயசேவைப் பிரிவு, 6/558,மதுரை

மெயின் ரோடு. செக்கானூரணி, திருமங்கலம் தாலுகா, மதுரை10; அழகப்பன் நகர் கூட்டுறவு சுயசேவைப் பிரிவு 4, பாண்டியன் தெரு, அழகப்பன் நகர். மதுரை3; தலைமையக சுயசேவைப் பிரிவு, 216, தேனிமெயின் ரோடு. முடக்குச்சாலை, மதுரை 16;

தொலைபேசி எண்கள் 93840 33881 மற்றும் 93840 33882; மஹால் கூட்டுறவு சுயசேவைப் பிரிவு,162, கீழ வெளி வீதி, திருமலை நாயக்கர் மஹால் எதிர்புறம், மதுரை1.; செல்லூர் கூட்டுறவு சுயசேவைப் பிரிவு, 45. குலமங்கலம் மெயின் ரோடு. பூந்தமல்லி நகர். செல்லூர், மதுரை2; தமிழ்நாடு போக்குவரத்து கழக பணியாளர்கள் கூட் டுறவு பண்டகசாலை, 27, பசும்பொன் நகர், பைபாஸ் ரோடு, மதுரை16; தொலைபேசி எண்82488. 98071; மதுரை தென்னக இரயில்வே தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலை, 3781, இரயில்வே காலனி, மதுரை 16; தொலைபேசி எண் 95665 14441; மதுரா கோட்ஸ் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலை, ஆரப் பாளையம் கிராஸ் ரோடு, கள் மதுரை. தொலைபேசி எண் 962992 7391

தரமான காய்கறிகள் சரியான எடையில் நுகர்வோரைச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் வெளிச்சந்தையின் விலையை விட குறைவான விலையில் வழங்கிடவும்,கூட்டுறவுத் துறை அலுவலர்களால் விற்பனை தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

நுகர்வோர் தங்கள் அருகிலுள்ள கூட்டுறவு விற்பனை நிலையத்தில் இத் தொகுப்பினை பெற்றுப் கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இதனை மதுரை மண்டல இணைப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.

### சிவகாசியில்

# லஞ்சம் வாங்கிய ஊராட்சி பெண் செயலாளர்-பணியாளர் கைது

## போலீசார் நடவடிக்கை

சிவகாசி,நவ.7–

சிவகாசி ஒன்றியத்திற்குட்பட்ட அனுப்பன்குளம் ஊராட்சியின் செயலாளர் சத்யாதேவி(36). இவர் ஊராட்சியில் பேவர் பிளாக் சாலைப் பணிக்கான பட்டியலை வழங்க ஒப்பந்ததாரரிடம் ரூபாய்5 ஆயிரம் லஞ்சம் கேட்டதாகத்தெரிகிறது. இதுகுறித்து ஒப்பந்ததாரர் விருதுநகர் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுத் துறையில் புகார் தெரிவித்தார். புகாரின் பேரில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் வழங்கிய ரசாயனம் தடவிய 5 ஆயிரம் ரூபாய் பணத்தை அனுப்பன்குளம் ஊராட்சி செயலாளர் சத்யாதேவி அறிவுறுத்தலின் பேரில் ஊராட்சி பணித்தள பொறுப்பாளர் வித்யாபாரதி(34) ஒப்பந்ததாரிடமிருந்து பெற்றுக் கொண்ட போது, லஞ்ச ஒழிப்பு போலீஸ்டிஎஸ்பி ராமச்சந்திரன் தலைமையான போலீசார்கள் கையும் களவுமாக பிடித்தனர். இதனையடுத்து பணித்தளப் பொறுப்பாளர் வித்யாபாரதி மற்றும் ஊராட்சி செயலர் சத்யாதேவி ஆகிய இருவரையும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் கைது செய்து, ஆவணங்களைப் கைப்பற்றியதுடன், சிவகாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்திய பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.




ஊராட்சி பெண்செயலாளருடன், பெண் உதவியாளரும் லஞ்ச ஒழிப்பு போலீஸ் துறையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் சிவகாசி ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடையே பெரும் அச்சத்தையும், பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மெட்ராஸ் மணி
MADRAS MANI DAILY TAMIL PUBLISHED FROM - CHENNAI
நவ 07 2026 சனிக்கிழமை

# தீபாவளி: கோவையில் இருந்து வெளியூர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

கோவை:

தீபாவளிப் பண்டிகையையொட்டி, கோவை அரசுப் போக்குவரத்துக்கழகம் சார்பில், ஒப்பந்த அடிப்படையில் சுற்றுலாப் பேருந்துகள், சிறப்புப் பேருந்துகளாக வகைப்படுத்தப்பட்டு வெளியூர்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

தீபாவளிப் பண்டிகை வரும் 8ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, வெளியூர்களில் வசிக்கும் மக்கள், பண்டிகையை கொண்ட தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பும் வகையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகம் சார்பில், மாநிலம் முழுவதும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, கோவை கோட்ட அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் கோவை மாவட்டத்தில்இருந்துவெளியூர்களுக்குவழக்கமான 5 ஆயிரம் பேருந்துகளுடன், கூடுதலாக 2,895 சிறப்புப்பேருந்துகளும் இயக்கப்பட்டுவருகின்றன. இந்த சிறப்புப் பேருந்துகளின் இயக்கம் கோவையில் நேற்று (நவ.5) முதல் தொடங்கியது.டெல்டா மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் சூலூர் பேருந்து நிலையத்தில் இருந்தும், தென் மாவட்டங்கள் செல்லும் பேருந்துகள் சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் இருந்தும், மேற்கு மாவட்டங்களுக்கு செல்லும்பேருந்துகள்காந்திபுரம் மத்தியப் பேருந்து நிலையத்தில் இருந்தும், நீலகிரி மாவட்டத்துக்கு செல்லும் பேருந்துகள் சாயிபாபாகாலனி புதிய பேருந்து நிலையத்தில் இருந்தும், பழநியை மையப்படுத்தி செல்லும் பேருந்துகள் உக்கடம் பேருந்து நிலையத்தில் இருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்துகளின் பற்றாக்குறையை தவிர்க்க, தரமான கட்டமைப்புடன் கூடிய, சமீபத்தில் கொள்முதல் செய்யப்பட்டநகரப்பேருந்துகளும்வெளியூர்களுக்கு இயக்கப்படுகின்றன.அதேபோல்,சொகுசுஇருக்கை வசதி கொண்ட சுற்றுலா பேருந்துகளும் ஒப்பந்த அடிப்படையில் நேற்று (நவ.5) முதல் கோவையி'ல் இருந்து வெளியூர்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.இதுதொடர்பாக கோவை அரசுப் போக்குவரத்துக் கழக உயரதிகாரிகள் கூறும்போது, ''பயணிகள் நெருக்கடி இன்றி வெளியூர்களுக்கு செல்ல ஏதுவாக வழக்கமான பேருந்துகளுடன், சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

அதன்படி, கோவையில் ஒப்பந்த அடிப்படையில் 30 சுற்றுலா பேருந்துகள் (தனியார் பேருந்துகள்) வெளியூர்களுக்குஇயக்கப்படுகின்றன.கோவையில் இருந்து சென்னைக்கு 20 பேருந்துகளும், மதுரை மற்றும் திருச்சிக்கு தலா 5 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.இதில் ஓட்டுநர் அந்த பேருந்தின் ஓட்டுநரே இருப்பார். போக்குவரத்துக் கழக நடத்துநர் பணியில் இருப்பார். அரசுப் பேருந்துக்குரியகட்டணமே இதிலும் பயணிகளிடம் வசூலிக்கப்படுகிறது.இப்பேருந்தின்முகப்பிலேயே ஒப்பந்தப் பேருந்து, சிறப்புப் பேருந்து, வழித்தட பெயர்கள் ஆகியவை பெரிய ஸ்டிக்கர்களாக ஒட்டப்பட்டுள்ளது. நேற்று காலை முதல் இப்பேருந்துகளும் களத்தில் இயக்கப்பட்டு வருகின்றன'' என்றனர்.

### போடி அருகே

# தோட்டத்தில் மின் மோட்டார், வயர் திருட்டு

போடி, நவ. 7

போடி அருகே தோட்டத்தில் மின் மோட்டார், வயர் திருடியவர்கள் குறித்து போலீஸார் புதன்கிழமை வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

போடி அருகே பெருமாள்கவுண்டன்பட்டியைச் சேர்ந்தவர் பரமசிவம் மகன் ஜெயராம் (67). இவரது தென்னந்தோப்பு இதே ஊரில் சுடுகாடு அருகே உள்ளது. இங்குள்ள மோட்டார் அறையில் மின் மோட்டார் பொருத்தப்பட்டிருந்தது. இந்த அறையிலிருந்த மின் மோட்டார், வயர்களை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து புகாரின் பேரில் போடி ஊரகக் காவல் நிலையப் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

### அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# பட்டாசுகள் வெடிப்பது குறித்து விழிப்புணர்வு பிரசாரம்

## தீயணைப்புத் துறை சார்பில் நடந்தது

சோழவந்தான் நவ 7

தீபாவளி பண்டிகை நாடு முழுவதும் நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில் பட்டாசு கடைகளில் புதிய ரக பட்டாசுகளை வாங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் தீயணைப்பு துறை சார்பில் பாதுகாப்பான முறையில் பட்டாசுகள் வெடிப்பது குறித்தும் ஆபத்தான பெரிய வகை பட்டாசுகளை குழந்தைகளிடம் கொடுத்து வெடிக்க செய்வதை தவிர்ப்பது உள்ளிட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டனர் இதுகுறித்து தங்கள் பெற்றோர்கள் மற்றும் அருகில் உள்ள வர்களிடம் பாதுகாப்பான முறையில் பட்டாசுகள் வெடிப்பது குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என வும் அனைத்து மாணவிகளிடம் அறிவுறுத்தப்பட்டது இதே போன்று சோழவந்தானின் பல்வேறு பகுதிகளிலும் தீயணைப்புதுறை சார்பில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப் புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன

# மணலூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் கிராம பொதுப்பணம் கையாடல்

## சங்க செயலாளர்கள் உள்பட 4 பேர் மீது வழக்கு

முதுகுளத்தூர், நவ.7

முதுகுளத்தூர் அருகே கூட்டுறவு கடன் சங்கத்தில் கிராம பொதுப் பணத்தை கையாடல் செய்ததாக சங்க செயலாளர்கள் உள்பட நான்கு பேர் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அடுத்துள்ள அபிராமம் காவல் சரக்கத்துக்கு உள்பட்ட மணலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மணலூர் கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன், வீரபத்திரன், சந்திரன், நாகராஜன் ஆகிய நான்கு நபர்களின் பெயரில் சேமிப்பு கணக்கு தொடங்கி மணலூர் கிராமத்தின் பொதுப்பணத்தை சேமித்து வைத்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 2019 முதல் 2022 வரை செயலாளராக இருந்த நாகராஜன் உதவியுடன் வீரபத்திரனும், சந்திரனும் சேர்ந்து பல லட்சம் பணத்தை கையாடல் செய்தது மற்ற இரண்டு நபர்களான பாஸ்கரன், கு.நாகராஜன் ஆகியோருக்கு தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பாஸ்கரன் அபிராமம்காவல்நிலையத்தில் வீரபத்திரன், சந்திரன் மற்றும் கூட்டுறவு கடன் சங்கத்தின் முன்னாள் செயலாளர் நாகராஜன், தற்போதைய வங்கி செயலாளர் சண்முகம் உள்ளிட்டோர் மீது புகார் அளித்துள்ளார். இவர் அளித்த புகாரின் அடிப்படையில் போலீசார் மேற்கண்ட நான்கு நபர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து வங்கி கணக்கு பரிவர்த்தனை மற்றும் கையாடல் செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதை தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# வழிப்பறி வழக்கில் பிடிபட்டபின் போலீஸ் பிடியில் இருந்து சிறுவன் தப்பி ஓட்டம்

பூந்தமல்லி, நவ,7

வானகரத்தில் வழிப்பறி வழக்கில் கைது செய்யப் பட்ட சிறுவனை போலீஸ் நிலையத்திற்கு உள்ளே அழைத்து சென்ற போது, தப்பி ஓடிவிட்டான்.

சென்னை மேற்கு முகப்பேர் பகுதியைச் சேர்ந்தவர் மதன்குமார் ( வயது 22 ) இவர் கடந்த 4–ஆம் தேதி அதே பகுதியில் தாம்பரம் செல்ல நடந்து சென்றார்.

அப்போது அவ்வழியாக பைக்கில் வந்த 2 பேர் மதன்குமாரிடம் எங்கே நடந்து செல்கிறீர்கள் என்று கேட்டு உள்ளனர்.

தாம்பரம் செல்ல வேண்டும். அதற்காக பஸ் நிலையம் செல்கிறேன் என அவர் கூறியுள்ளார். அப்போது பைக்கில் வந்தவர்கள் நாங்கள் மதுரவாயல் பகுதிக்கு செல்கிறோம் அங்கே இறங்கி கொள்ளுங்கள், அங்கிருந்து தாம்பரத்திற்கு அடிக்கடி பஸ் வரும் என கூறியுள்ளனர்.

இதனால், மதன் குமார் அந்த பைக்கில் ஏறிக் கொண்டார். பைக் அடையாளம்பட்டு சர்வீஸ் சாலையில் சென்ற போது, பைக் நிறுத்தப்பட்டது. உடனே பைக்கில் வந்தவர்கள் மதன் குமாரை மிரட்டி பணம் கேட்டனர். பணம் இல்லை என்று சொன்ன போது, செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இதுபற்றி மதன் குமார் வானகரம் போலீஸ் நிலையத்தில் புகார்கொடுத்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். மேலும் சிசிடிவி காட்சி பதிவுகளை ஆய்வு செய்தனர்.

பின்னர், வழிப்பறியிலா ஈடுபட்ட நொளம்பூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் ( வயது 20) 17 வயது சிறுவன் ஆகிய இருவரையும் கைது செய்து, வானகரம் காவல் நிலையம் அழைத்து வந்தனர். பின்னர் இருவரையும் காவல் நிலையம் உள்ளே அழைத்து சென்ற போது , சிறுவன் மின்னல் வேகத்தில் தப்பி ஓடிவிட்டான். உடனே போலீசார் அவரை துரத்தி பிடிக்க முயன்ற போது சிறுவன் தலைமறைவாகி விட்டான்.

இதுபற்றி வானகரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேலூர் ஒடுகத்தூர் அருகே பரபரப்பு

# விஷம் குடித்து விட்டு பள்ளிக்கு சென்ற மாணவி மயங்கி விழுந்தார்

## மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

அணைக்கட்டு, நவ.7

ஒடுகத்தூர் அருகே குடும்பப் பிரச்சினையால் மனவேதனை அடைந்த 16 வயது பள்ளி மாணவி விஷம் குடித்து பள்ளிக்குச் சென்ற போது, பள்ளி வளாகத்திலேயே மயங்கி விழுந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேலூர் மாவட்டம் ஒடுகத்தூர் அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 16 வயது, 12ம் வகுப்பு மாணவி, அப்பகுதியில் உள்ள அரசு பள்ளியில் படித்து வருகிறார்.

இவரது தந்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு குடும்பப் பிரச்சினை மற்றும் கருத்து வேறுபாடு காரணமாக குடும்பத்தினரை விட்டு பிரிந்து சென்றதாக கூறப்படுகிறது. இதனால் தந்தை எங்கு சென்றார் என்பது குறித்து மாணவி தனது தாயிடம் அவ்வப்போது கேட்டு வந்துள்ளார்.

இதுதொடர்பாக மகள் கேள்வி எழுப்பியபோது, அவரது தாய் திட்டியதாக கூறப்படுகிறது. இதனால் மனவேதனை அடைந்த மாணவி, நேற்று காலை பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு வீட்டிலேயே விஷம் குடித்துவிட்டு வழக்கம்போல் பள்ளிக்குச் சென்றுள்ளார்.

பள்ளியில் சிறிது நேரம் இருந்த நிலையில், திடீரென மாணவி பள்ளி வளாகத்திலேயே மயங்கி விழுந்துள்ளார். இதனைப் பார்த்த ஆசிரியர்கள் மற்றும் சக மாணவிகள் அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அவரை மீட்டு ஒடுகத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மாணவிக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு மாணவிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சோழவந்தான் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# பட்டாசுகள் வெடிப்பது குறித்து விழிப்புணர்வு பிரசாரம்

## தீயணைப்புத் துறை சார்பில் நடந்தது

சோழவந்தான் நவ 7

தீபாவளி பண்டிகை நாடு முழுவதும் நாளை மறுநாள் கொண்டாடப் பட உள்ள நிலையில் பட்டாசு கடைகளில் புதிய ரக பட்டாசுகளை வாங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் தீயணைப்பு துறை சார்பில் பாதுகாப்பான முறையில் பட்டாசுகள் வெடிப்பது குறித்தும் ஆபத்தான பெரிய வகை பட்டாசுகளை குழந்தைகளிடம் கொடுத்து வெடிக்க செய்வதை தவிர்ப்பது உள்ளிட்ட விழிப்புணர்வு பிரச்சாரத்தில் தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்

இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் சோழவந்தான் அரசு பெண்கள் மேல் நிலையில் பள்ளியில் படிக்கும் சுமார் 1500 க்கு மேற்பட்ட மாணவிகளுக்கு பாதுகாப்பான முறையில் பட்டாசுகள் வெடிப்பது மற்றும் பொது மக்கள் அதிகம் இருக்கக்கூடிய பகுதிகளில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்ப்பது குழந்தைகளுக்கு பெரிய வகை பட்டாசுகளை கொடுப்பதை தவிர்ப்பது உள்ளிட்ட விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது மதுரைமாவட்டத்தின் தீயணைப்புதுறை உதவி மாவட்ட அலுவலர் பொன் திருமுருகன் மற்றும்சோழவந்தான்நிலைய அலுவலர் நாகராஜன் தலைமையில் தீயணைப்புத்துறையினர் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டனர் இதுகுறித்து தங்கள் பெற்றோர்கள் மற்றும் அருகில் உள்ளவர்களிடம் பாதுகாப்பான முறையில் பட்டாசுகள் வெடிப்பது குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அனைத்து மாணவிகளிடம் அறிவுறுத்தப்பட்டது இதே போன்று சோழவந்தானின் பல்வேறு பகுதிகளிலும் தீயணைப்புதுறை சார்பில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன

---

## இன்டகிரேட்டட் ஹைடெக் லிமிடெட்

முகவரி: 150/115, சிசன்ஸ் காம்ப்ளக்ஸ், 3வது தளம், மோனிடெத் சாலை, எழும்பூர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600008
கைபேசி எண்: 9223400434, தொடர்பு எண்: 044-42145221 மின்னஞ்சல் முகவரி: easitax.ihl@gmail.com;
இணையதளம்: www.easitax.com
30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்

தனிப்பட்ட (லட்சங்களில்)

| விவரங்கள் | காலாண்டு முடிவு 30.09.2026 தணிக்கை செய்யப் படாதது | காலாண்டு முடிவு 30.06.2026 தணிக்கை செய்யப் படாதது | காலாண்டு முடிவு 31.03.2026 தணிக்கை செய்யப் படாதது | அரையாண்டு முடிவு 30.09.2026 தணிக்கை செய்யப் படாதது | அரையாண்டு முடிவு 30.09.2025 தணிக்கை செய்யப் படாதது | ஆண்டு முடிவு 31.03.2026 தணிக்கை செய்யப் பட்டது |
|---|---|---|---|---|---|---|
| செயல்பாடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம் (நிகர) | 0.16 | 0.46 | 0.74 | 0.62 | 1.41 | 0.99 |
| வரிக்கு முன் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் நிகர இலாபம்/ (நஷ்டம்) | (5.92) | 9.04 | (17.37) | 3.12 | (26.19) | (7.97) |
| வரிக்கு பின் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் நிகர இலாபம்/ (நஷ்டம்) | (5.92) | 9.04 | (17.37) | 3.12 | (26.19) | (7.97) |
| வரிக்கு முன் காலத்திற்கான நிகர இலாபம்/ (நஷ்டம்) (விதிவிலக்கான இனங்களுக்குப் பிறகு) | (5.92) | 9.04 | (17.37) | 3.12 | (26.19) | (7.97) |
| வரிக்குப் பின் காலத்திற்கான நிகர இலாபம்/ (நஷ்டம்) (விதி விலக்கான இனங்களுக்குப் பிறகு) | (5.92) | 9.04 | (17.37) | 3.12 | (26.19) | (7.97) |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு சமபங்குக்கு முகமதிப்பு ரூ. 10/-) | 1,000.46 | 1,000.46 | 1,000.46 | 1,000.46 | 1,000.46 | 1,000.46 |
| இருப்புத்தொகை (முந்தைய ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள மறுமதிப்பீட்டு இருப்புத்தொகையைத் தவிர்த்து) | (1,048.03) | (1,042.11) | (1,060.55) | (1,048.03) | (1,060.55) | (1,051.15) |
| ஒரு பங்குக்கான வருவாய் (விதிவிலக்கான இனங்களுக்கு முன்) (ஒவ்வொன்றும் ரூ. 10/-) அடிப்படை: | (0.06) | 0.09 | (0.17) | 0.03 | (0.26) | (0.08) |
| நீர்த்தப்பட்ட: | (0.06) | 0.09 | (0.17) | 0.03 | (0.26) | (0.08) |
| ஒரு பங்குக்கான வருவாய் (விதிவிலக்கான இனங்களுக்குப் பிறகு) (ஒவ்வொன்றும் ரூ. 10/-) அடிப்படை: | (0.06) | 0.09 | (0.17) | 0.03 | (0.26) | (0.08) |
| நீர்த்த: | (0.06) | 0.09 | (0.17) | 0.03 | (0.26) | (0.08) |

குறிப்புகள்:
1) முந்தைய ஆண்டு/காலகட்டத்தின் புள்ளிவிவரங்கள், தேவைப்படும் இடங்களில் மறு குழுவாக்கம்/மறு வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளன.
2) மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, நவம்பர் 05, 2026 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான முடிவுகள் தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
3) நிறுவனம் ஒரே ஒரு பிரிவில் மட்டுமே செயல்படுவதால், IndAS 108 "செயல்பாட்டுப் பிரிவு" என்பதன் கீழ் தகவல்களை வெளியிட வேண்டிய அவசியமில்லை.

இடம்: சென்னை
தேதி: 05-11-2026

இன்டகிரேட்டட் ஹைடெக் லிமிடெட் சார்பாக,
கையொப்பம்/-
எபெனெசர் ஜெரால்ட்
நிர்வாக இயக்குநர்
DIN: 02026613

---

CREDIT SAISON INDIA

பதிவுசெய்யப்பட்ட முகவரி: கிசெட்சு சைசன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், இண்டிகுப் லெக்சிங்டன் டவர், முதல் தளம், தவரேகெரே மெயின் ரோடு, எஸ்.ஜி. பால்யா, பெங்களூரு, கர்நாடகா 560029. கிளை முகவரி: கிசெட்சு சைசன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், அபார்ட்மெண்ட் எண் 501 முதல் 504 வரை மற்றும் 509ன் ஒரு பகுதி, 5வது தளம், காமர்ஸ் ஹவுஸ், 7 ரேஸ் கோர்ஸ் ரோடு, ஆர்.எஸ். பண்டாரி மார்க், இந்தூர் 452001.

## அறிவிப்பு கோரிக்கை

## SARFAESI சட்டம், 2002 இன் பிரிவு 13 (2) இன் கீழ் அறிவிப்பைக் கோருங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுநர்கள், இணைகடன் பெறுநர்கள், பிணையதாரர்கள் (Guarantors) மற்றும் அடமானம் வைத்திருப்பவர்கள் ஆகிய நீங்கள், உங்கள் அசையாச் சொத்துக்களை அடமானம் வைத்து 'கிட்செட்சு செய்ஸன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றுள்ளீர்கள். நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, உங்கள் கடன் கணக்கு 'செயல்பாடற்ற சொத்து' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 'கிட்செட்சு செய்ஸன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்' நிறுவனம், சட்டத்தின் கீழ் ஒரு 'பிணையம் கொண்ட கடன் வழங்குநர்' என்ற முறையில், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் 'பிணைய உரிமை (அமலாக்க) விதிகள், 2002'ன் விதி 2 ஆகியவற்றின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 3வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுநர்கள், இணைகடன் பெறுநர்கள், பிணையதாரர்கள் மற்றும் அடமானம் வைத்திருப்பவர்களுக்கு, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அதன் மீதான வருங்கால வட்டியுடன் சேர்த்து, அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரி 'கோரிக்கை அறிவிப்பு' (Demand Notice) அனுப்பியது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் இந்த அறிவிப்புகளை அவர்களில் சிலருக்கு வழங்க இயலவில்லை.

| Sr. No. | கடன் பெறுபவர் / இணை கடன் பெறுபவர் / பிணையதாரரின் பெயர் | கோரிக்கை அறிவிப்புத் தேதி, வாராக் கடன் தேதி மற்றும் தொகை | அசையாச் சொத்துகளின் விவரணை |
|---|---|---|---|
| 1. | கடன் ஒப்பந்த எண்: **14542574** 1. திரு. சீதாலட்சுமி (கடன் வாங்கியவர்) 2. திரு. சிவக்குமார் தங்கவேல் (இணை கடன் வாங்குபவர்/ அடமானம் கொள்பவர்) 3. திரு. கார்த்திக் ராஜ் சிவக்குமார் (இணை கடன் வாங்கியவர்) முகவரி: 1/36, அண்ணாநகர் முத்து கவுண்டன் புதூர், கோயம்புத்தூர் 6, கோயம்புத்தூர் 6, தமிழ்நாடு 6, நீலம் 6 மேலும் 37 B மேற்கு பகுதி NA, SF 147/1 2 3 4 5 6 7, நீலம்பூர் வி லேஜ், அருகில் ஸ்ரீ கணபதி மார்ட், சூலூர் தாலுக்கா, முத்து கவுண்டன் புதூர் கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641062 | தேதி: 3 நவம்பர் 2026; 03112026 அன்று நிலுவையில் உள்ள தொகை: ரூ. 1,23,59,304/ (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி மூன்று லட்சத்து ஐம்பதிதொன்பதாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்). வாராக் கடன் (NPA) ஆன தேதி: 1 நவம்பர் 2026. | **அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்தின் விரிவான விவரம்:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், முன்பு சூலூர் சார்பதிவு மாவட்டம், தற்போது கருமத்தம்பட்டி சார்பதிவு மாவட்டம், சூலூர் வட்டம், நீலாம்பூர் கிராமம், சூலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும், முத்துக்கவுண்டன் புதூர் ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நிலம். சர்வே எண் (S.F.No.) 147/1, 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் அடங்கிய 6.62 ஏக்கர் நிலம் மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில், மனை எண் 35ன் எல்லைகள் வருமாறு: வடக்கில் மனை எண் 35A, தெற்கில் மனை எண் 34B, கிழக்கில் 30 அடி அகலமுள்ள தெற்குவடக்கு சாலை, மேற்கில் மனை எண் 37B. இதன் அளவு: கிழக்குமேற்காக இரு பக்கங்களிலும் 60 அடி, தெற்குவடக்காக இரு பக்கங்களிலும் 40 அடி என மொத்தம் 2400 சதுர அடி நிலம். மேலும், மனை எண் 35Aக்கு வடக்கிலும், மனை எண் 34Bக்கு தெற்கிலும், மனை எண் 35க்கு கிழக்கிலும், மனை எண் 37Bல் உள்ள 1740 சதுர அடி நிலத்திற்கு மேற்கிலும் அமைந்துள்ள பகுதி; இதன் அளவு: கிழக்குமேற்காக இரு பக்கங்களிலும் 16.5 அடி, தெற்குவடக்காக இரு பக்கங்களிலும் 40 அடி என மொத்தம் 660 சதுர அடி நிலம். ஆக மொத்தம் 3060 சதுர அடி நிலம் மற்றும் இதனுடன் பொதுப் பாதையைப் பயன்படுத்தும் உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும், இதனுடன் இணைந்த அனைத்து வசதிகளும் இதில் அடங்கும். மேற்படி சொத்து, பட்டா எண் 2829ன் படி, சர்வே எண் (S.F.No.) 147/6Aல் அமைந்துள்ளது. |
| 1. | கடன் ஒப்பந்தம் எண்: **16135309** 1. திரு. முத்துக்குமார் கண்ணன் (கடன் வாங்கியவர்) 2. திருச்செந்தூர் முருகன் பழங்கள் (இணை கடன் வாங்கியவர்) அதன் உரிமையாளர் மூலம் 3. திருமதி ரேவதி கண்ணன் (இணை கடன் வாங்கியவர்) 4. திரு. எம் கண்ணன் (இணை கடன் வாங்குபவர் இல்லை) 1/ 420, 2வது தளம், வளையாபதி சாலை, மொகப்பேர் கிழக்கு, மொகப்பேர் திருவ லூர், சென்னை, தமிழ்நாடு 600037 மேலும் முகவரி: கதவு எண். 29/21, பிளாட் எண். 420, T S எண். 123/1 பகுதி நேரு நகர், NSK, 1வது தெரு, சென்னை 40 தமிழ்நாடு தெரு, வேலா 60 தமிழ்நாடு தெரு. | தேதி: 3 நவம்பர் 2026 & 03.11.2026 அன்று நிலுவையில் உள்ள தொகை: ரூ. 1,95,78,319/ (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றைந்து லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து முன்னூற்று பத்தொன்பது மட்டும்). வாராக்கடன் (NPA) ஆன தேதி: 1 நவம்பர் 2026 | **அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்தின் விரிவான விவரம்:** கதவு எண் 29, மனை எண் 420, என்.எஸ்.கே. (N.S.K.) முதல் தெரு, நேரு நகர் பகுதி2, வேளச்சேரி, சென்னை 600042 என்ற முகவரியில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம். இது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் வருகிறது. வேளச்சேரி கிராமம் (கிராம எண் 137), மாம்பலம்கிண்டி தாலுகா (தற்போது வேளச்சேரி தாலுகா), சென்னை மாவட்டம், டி.எஸ். எண் 123/1ன் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இதன் மொத்த பரப்பளவு 1872.24 சதுர அடி (174.0 சதுர மீட்டர்) ஆகும்; இதில் நிலம், கட்டிடம் மற்றும் மின்சார இணைப்பு போன்றவை அடங்கும். இதன் எல்லைகள்: வடக்கு மனை எண் 415, தெற்கு மனை எண் 421, கிழக்கு என்.எஸ்.கே. முதல் தெரு, மேற்கு மனை எண்கள் 419 மற்றும் 416. அளவுகள்: வடக்கு பக்கத்தில் கிழக்குமேற்காக 15.0 மீட்டர் (49.5 அடி), தெற்கு பக்கத்தில் கிழக்குமேற்காக 15.0 மீட்டர் (49.5 அடி), கிழக்கு பக்கத்தில் வடக்குதெற்காக 11.6 மீட்டர் (38.28 அடி), மேற்கு பக்கத்தில் வடக்குதெற்காக 11.6 மீட்டர் (38.28 அடி). ஆக மொத்தம் 1872.24 சதுர அடி (அல்லது 174.0 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட நிலம், அதன் மீதுள்ள கட்டிடம் மற்றும் மின்சார இணைப்பு உள்ளிட்டவை இதில் அடங்கும். |

பத்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுபவர்/இணைகடன் பெறுபவர்/பிணையாளர் மற்றும் அடமானம் வைத்தவர் ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. பத்தி 3இல் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகையை, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பத்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியின்படி, அந்தந்த கடன் கணக்கிற்காக இந்தத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது. ஒருவேளை, இந்த மொத்தத் தொகையுடன், பணம் செலுத்தும் நாள் வரை சேரக்கூடிய வட்டி மற்றும் பிற கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால், 'கிசெட்சு செய்ஸன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்' (Kisetsu Saison Finance (India) Private Limited) நிறுவனம், பத்தி 4இல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளின் மீதான பிணைய உரிமையை (security interest) அமல்படுத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அறிவிப்பானது, சட்டப்படி 'கிசெட்சு செய்ஸன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்திற்கு, கடன் பெறுபவர்/இணைகடன் பெறுபவர்/பிணையாளர்/அடமானம் வைத்தவர் ஆகியோருக்கு எதிராக உள்ள உரிமைகள் மற்றும் சட்டத் தீர்வுகளைப் பாதிக்காது என்பதைக் கவனத்தில் கொள்க. மேலும், சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(13)இன் படி, பிணையமாக உள்ள சொத்துகளை, கடன் வழங்கிய நிறுவனத்தின் முன் அனுமதியின்றி விற்பனை செய்வது, குத்தகைக்கு விடுவது அல்லது வேறு ஏதேனும் வகையில் பரிமாற்றம் செய்வது அல்லது கையாள்வது உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம்: தமிழ்நாடு,
தேதி: 07.11.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
(கிசெட்சு செய்ஸன் ஃபைனான்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.)

---

केनरा बैंक Canara Bank
Syndicate Bank
(A Government of India Undertaking)
Head Office: Bangalore

ARM 1 கிளை,2வது தளம்,
எண்.86, ஸ்பென்சர் டவர்,
எம்.ஜி. சாலை பெங்களூரு-560001
தொலைபேசி: 080-25310066, மின்னஞ்சல்: cb2366@canarabank.com

## விற்பனை அறிவிப்பு

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 (6)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.**

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம் வைக்கப்பட்டதும், **கனரா வங்கியின் பெங்களூரு, ARM-1 கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் கைவசப்படுத்தப்பட்டதுமான, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, ரூ. தொகையை வசூலிப்பதற்காக, **24.11.2026 அன்று (காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை) "உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே", "உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே"**, மற்றும் **"உள்ளவை அனைத்தும்"** என்ற அடிப்படையில் விற்கப்படும்.**ரூ 70,50,528.80 (ரூபாய் எழுபது இலட்சம் ஐம்பதாயிரத்து ஐநூற்று இருபத்தெட்டு, எண்பது பைசா மட்டும்) 30.10.2026** அன்றுள்ள நிலவரப்படி, அதற்கான கூடுதல் வட்டி மற்றும் செலவுகளுடன், **கனரா வங்கியின் பெங்களூருவில் உள்ள ARM-1 கிளைக்குச்** செலுத்த வேண்டிய தொகை, **(1) திரு. விஜய் குமார் ரவி குமார்**, த/பெ ரவி குமார், எண்.71, பாகூர் கிராமம், பாகேபள்ளி அஞ்சல், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு-635103. **(2) திரு. லட்சுமி நாராயணா**, த/பெ திரு. ரவி குமார், எண்.71, பாகூர் கிராமம், பாகேபள்ளி அஞ்சல், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு-635103. **(3) திரு. ரவி குமார் B M**, த/பெ முனிசுவாமி, எண்.71, பாகூர் கிராமம், பாகேபள்ளி அஞ்சல், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு-635103. ஆகியோரிடமிருந்து. **(4) திரு. T. முகுந்தன் (உத்தரவாதம் அளிப்பவர்)** த/பெ திம்மராயப்பா, எண்.4/215 குருப்பட்டி, சரகபள்ளி அஞ்சல், தென்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு-635114. முன்பணமானது, **M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட் (https://baanknet.com/) இணையதளத்தின் இ-வாலட்** வழியாக நேரடியாகவோ அல்லது அதில் சலான் உருவாக்கி, அந்த சலானில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விவரங்களுக்கு **RTGS/NEFT** மூலம் முன்பணத்தை **(EMD) 23.11.2026 அன்று மாலை 6.00 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

(₹லட்சங்களில்)

| மனை | அசையாச் சொத்துக்களின் விவரம் | முன்பதிவு விலை | EMD | கூடுதல் மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுகா, பாகேபள்ளி கிராமத்தில் அமைந்துள்ள, கிராம நத்தம் சர்வே எண் 697, புதிய நத்தம் 697/27 கொண்ட, 110 சதுர மீட்டர் அல்லது 1180 சதுர அடி பரப்பளவுள்ள, ஆர்.சி.சி கூரை கட்டிடம் அடங்கிய சொத்தின் ஒரு பகுதி. இதன் கிழக்கில் கிருஷ்ணப்பா வீடு, மேற்கில் கூப்பாலியப்பா வீடு, வடக்கில் பாப்பண்ணா வீடு, தெற்கில் 3 அடி பஞ்சாயத்து சாலை ஆகியவை எல்லைகளாக அமைந்துள்ளன. | ₹. 45.00 | ₹. 4.50 | ₹. 1.00 |

ஆய்வு தேதி மற்றும் நேரம்: 16.11.2026 காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று வரவும்.
தெரிந்துள்ள பளுக்கள், ஏதேனும் இருந்தால்: வங்கியின் கவனத்திற்கு வரவில்லை.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்டுள்ள "மின்-ஏலம்" (E-Auction) இணைப்பையோ அல்லது M/s. PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட் (https://baanknet.com/) போர்ட்டலின் மின்-பணப்பையையோ (E-Wallet) பார்க்கவும். மேலும், எந்தவொரு வேலை நாளிலும் அலுவலக நேரங்களில், ஏஆர்எம்-1 கிளை, பெங்களூரு, கனரா வங்கி, தொலைபேசி எண்கள்: 080-25310066, 7022044933 மற்றும் 9486092152 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 06.11.2026
இடம்: பெங்களூரு

கையொப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கனரா வங்கி

---

BAJAJ FINANCE

## பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்,
பஜாஜ் ஆட்டோ லிமிடெட் வளாகம், மும்பைபுனே சாலை, அகுர்டி, புனே 411035
கிளை அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், சென்னை, தமிழ்நாடு 600001

**நிதிச் சொத்துகளின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் சட்டம், 2002ன் பிரிவு 13(2)ன் கீழான கோரிக்கை அறிவிப்பு**

'பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடன் பெற்றவர்கள் மற்றும் இணைகடன் பெற்றவர்களுக்கு இந்த அறிவிப்பை வழங்குகிறார். இவர்கள், தாங்கள் பெற்ற கடனுக்கான அசல் தொகை, வட்டி மற்றும் இதர கட்டணங்களைச் செலுத்தத் தவறியதன் விளைவாக, இவர்களது கடன்கள் 'செயல்பாடற்ற சொத்துக்களாக' மாறியுள்ளன. இது தொடர்பாக, 'நிதிச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல் மற்றும் பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் சட்டம், 2002'ன் பிரிவு 13(2)ன் கீழ், இவர்களது கடைசி அறியப்பட்ட முகவரிகளுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. இருப்பினும், அவை வழங்கப்படாமல் திருப்பி வந்துவிட்டன. எனவே, இந்த அறிவிப்பின் வாயிலாக, கடன் பெற்றவர்கள் மற்றும் இணைகடன் பெற்றவர்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், தாங்கள் அவ்வப்போது பெற்ற கடன் வசதிகளின் கீழ் நிலுவையில் உள்ள தொகையை உடனடியாகச் செலுத்தித் தீர்க்க வேண்டும்.

| கடன் கணக்குஎண் / கடன் பெறுபவர்(கள்) / பிணையதாரர்(கள்) பெயர் மற்றும் முகவரிகள் | பிணையப்படுத்தப்பட்ட அசையாச் சொத்தின் விவரணை | கோரிக்கை அறிவிப்புத் தேதி மற்றும் தொகை |
|---|---|---|
| 1 லோன்: P403PBL11114557 1. ரமேஷ் அய்யநாதன் S/O அய்யநாதன் R/O. ரஞ்சித் ஆர்கேட் எண் 40 1 காமராஜர் சாலை லட்சுமிபுரம் திருவான்மியூர் சென்னை தமிழ்நாடு 600041, தொடர்புக்கு:9360039982, மின்னஞ்சல் ஐடி: rameshratna2909@gmail.com. மேலும் இங்கே: R/O. ரஞ்சித் ஆர்கேட் எண் 40 1 காமராஜர் சாலை லட்சுமிபுரம் திருவான்மியூர் சென்னை தமிழ்நாடு 600041, தொடர்புக்கு:9360039982, மின்னஞ்சல் ஐடி: rameshratna2909@gmail.com. 2. திவ்யா S S/O செல்வராஜ், R/O. ரஞ்சித் ஆர்கேட் எண் 40 1 காமராஜர் சாலை லட்சுமிபுரம் திருவான்மியூர் சென்னை தமிழ்நாடு 600041, தொடர்புக்கு: 9360039982, மின்னஞ்சல் ஐடி: rameshratna@gmail.com | சென்னை600020, அடையாறு, லேட்டிஸ் பிரிட்ஜ் சாலையில் அமைந்துள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ள 'அட்டவணை II' சொத்தில் 250 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு; அதனுடன் தரைதளத்தில் 'G1' என அடையாளப்படுத்தப்பட்ட குடியிருப்பு பிளாட் (பொதுப் பகுதிகள் உட்பட மொத்தம் 680 சதுர அடி பரப்பளவு கொண்டது) மற்றும் ஒரு பொதுவான மூடப்பட்ட கார் நிறுத்துமிடம். அட்டவணை II: சென்னை600020, அடையாறு, லேட்டிஸ் பிரிட்ஜ் சாலையில் உள்ள பிளாட் எண் 36A (புதிய கதவு எண் 66) கொண்ட நிலம். இது சென்னை மாவட்டம், மயிலாப்பூர்பிரிப்ளிகேன் தாலுகா (தற்போது வேளச்சேரி தாலுகா), பள்ளிப்பட்டு கிராமத்தில், பிளாக் எண் 21ல் அமைந்துள்ளது. இதன் பழைய நகர அளவை எண்கள் (T.S. No.) 33 (பகுதி), 34 (பகுதி) மற்றும் 25 ஆகும்; தற்போதைய நகர அளவை எண்கள் 34/2 மற்றும் 25/6 (பட்டா ஆவணத்தின்படி 33/2, 34/2 மற்றும் 25/6) ஆகும். சுமார் 1667 சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த நிலத்தின் எல்லைகள் வருமாறு: வடக்கில் 12 அடி அகலமுள்ள நிலம்; தெற்கில் சிட்டி கோஆப்பரேட்டிவ் ஹவுசிங் சொசைட்டி லிமிடெட் (வெங்கடரத்தினம் நகர்) நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம்; கிழக்கில் திரு. வாசுதேவன் மற்றும் திரு. பழனிசாமி ஆகியோருக்குச் சொந்தமான நிலம்; மேற்கில் திரு. கே. வெங்கடேசன் என்பவருக்குச் சொந்தமான நிலம். இது தென் சென்னை பதிவு மாவட்டத்தின், அடையாறு சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ளது. | **15.10.2026** ரூ. 36,22,531/ (முப்பத்து எட்டு லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து ஐந் நூற்று முப்பத்து ஒன்று ரூபாய் மட்டும்) |

மாற்று அறிவிப்பு வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்கூறிய கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள், உத்தரவாதமளிப்பவர்கள், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையையும் எதிர்கால வட்டியையும் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செய்யத் தவறினால் (பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்கு கிடைக்கக்கூடிய வேறு எந்த உரிமைத் தீர்விற்கும் பாதிப்பின்றி), நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துதல் சட்டம் 2002இன் பிரிவு 13(4)இன் விதிகளின்படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை அந்நியப்படுத்தவோ, மூன்றாம் தரப்பினரின் நலன்களை உருவாக்கவோ கூடாது என்றும் மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்தச் சொத்துக்களின் மீது பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் பொறுப்பு வகிக்கிறது.

தேதி: 07.11.2026, இடம்: தமிழ்நாடு

S/d , அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

---

FEDBANK

## ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: யூனிட் எண். 1101, 11வது தளம், சிக்னஸ், ப்ளாட் எண். 71 A, போவாய், பாஸ்போலி, மும்பை - 400087

**அசையாச் சொத்துக்களின் ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு**

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-ஐ, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8(6) மற்றும் 9(1)-உடன் சேர்த்துப் படிக்கும்போது, ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர்) மூலம் அசையாப் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்கான 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகக் கையொப்பமிட்டுள்ள நான், SARFAESI சட்டம் 2002-இன் கீழ் பாதுகாக்கப்பட்ட சொத்து(களின்) உடைமையைப் பெற்றுள்ளேன்.

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்கள்/கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/உத்தரவாதம் அளித்தவர்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரான ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் மீது அடமானம்/பற்று வைக்கப்பட்ட, மற்றும் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரான ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைவசப்படுத்தப்பட்ட, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, 17/12/2026 அன்று காலை 10 மணி முதல் 10.30 மணி வரை, "உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன உள்ளதோ அப்படியே" மற்றும் "எங்கு உள்ளதோ அங்கெல்லாம்" என்ற அடிப்படையில் விற்கப்படும்; இதற்காக, பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரான ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு, சூர்யகாந்த் ஜி (கடன் வாங்கியவர்) என்பவரிடமிருந்து, 19/9/2025 அன்று **FEDKCPOHL0511034 என்ற கடன் கணக்கு எண்ணில்** செலுத்த வேண்டியுள்ள **ரூ. 2092352/- (இருபது இலட்சம் தொண்ணூற்று இரண்டு ஆயிரம் முன்னூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்)** தொகையும், **அதனுடன் 19/9/2025** முதல் அதற்கான செலவுகளும் வசூலிக்கப்படும். ஹேமதர்ஷினி புண்ணியமூர்த்தி (கூட்டுக் கடன் வாங்குபவர்).

**அசையாச் சொத்தின் விவரம்**

அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் அனைத்துப் பகுதிகளும்கதவு எண் 1/195, சர்வே எண் 47/6A3, மனை எண் 199, குன்றத்தூர் தாலுகா, உட்பிரிவு எண் 181, பனப்பாக்கம் கிராமம், ஸ்ரீ சாய் கார்டன், பட்டா எண் 1200, துணைப்பிரிவு சர்வே எண் 47/94-இன் படி ஆர்சிசி கூரையிடப்பட்ட வீட்டுக் கட்டிடம், காஞ்சிபுரம்-603206, தமிழ்நாடு. எல்லைகள்: கிழக்கு - காலி நிலம், மேற்கு - 30 அடி அகலச் சாலை, வடக்கு - காலி நிலம், தெற்கு - மனை எண் 198

| | |
|---|---|
| குறைந்தபட்ச விலை (ரூபாயில்)' | ரூ. 36,00,000/- (முப்பத்தாறு லட்சம் ரூபாய் மட்டும்) |
| 'ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்' பெயரில் (DD)/ (PO)/ (RTGS) மூலம் முன்பண வைப்பு (ரூபாயில்) செலுத்தவும். | ரூ. 3,60,000/- (மூன்று இலட்சம் அறுபதாயிரம் ரூபாய் மட்டும்) |
| ஏலத்தொகை அதிகரிப்பு | ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்) |
| முன்பணத்துடன் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி/டெண்டரைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி, நேரம் மற்றும் இடம் | 17 டிசம்பர், 2026 அன்று மாலை 05:00 மணிக்குள் ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், 3வது தளம் - குரியோஸ் சாஃப்ட்வேர் பார்க், எண்:24 அம்பத்தூர் தொழிற்பேட்டை சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058. |
| சொத்துக்களை ஆய்வு செய்தல் | 10 டிசம்பர், 2026 மாலை 5 மணிக்கு முன் |
| உறுதிசெய்யப்பட்ட வெற்றிகரமான ஏலதாரர், ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகபட்ச ஏலத்தொகையில் 25% (முன்பணம் உட்பட) செலுத்துவதற்கான கடைசி தேதி | ஏலம் உறுதிசெய்யப்பட்ட நாளிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் பணம் செலுத்தப்பட வேண்டும் |
| அதிகபட்ச ஏலத்தொகையின் மீதமுள்ள 75% செலுத்துவதற்கான கடைசி தேதி | ஏலம் உறுதிசெய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (FEDFINA) பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் இணையதளமான **www.fedfina.com** மற்றும் **https://www.fedfina.com/public-notice-for-auction-cum-sale/** ஆகியவற்றில் ஏலம் (Auction) என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். ஏதேனும் விசாரணை, தகவல், ஆதரவு, செயல்முறை மற்றும் பயிற்சிக்கு, ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளான திரு. சந்தோஷ் எஸ் 8667349662, மின்னஞ்சல் முகவரி- **santhosh.s1@fedfina.com**, திரு. பிரபுதேவா ஜி 7397355237, மின்னஞ்சல் முகவரி prabudeva.g@fedfina.com மற்றும் திரு. மாரியப்பன் எம்-9043331394, மின்னஞ்சல் முகவரி-**mariappan.m@fedfina.com** ஆகியோருடன் தயவுசெய்து ஒருங்கிணைக்கவும்.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, SARFAESI சட்டம், 2002-இன் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிகளுக்கும் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

தேதி: 07/11/2026
இடம்: தமிழ்நாடு

கையொப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

---

motilal oswal Home Finance

## மோதிலால் ஓஸ்வால் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

**பதிவு அலுவலகம்:** மோதிலால் ஓஸ்வால் டவர், ரஹீம்துல்லா சயானி சாலை, எதிரில். பரேல் எஸ்.டி டிப்போ, பிரபாதேவி, மும்பை - 400 025, CS: 8291889898
**இணையதளம்:** www.motilaloswalhf.com,**மின்னஞ்சல்:** hfquery@motilaloswal.com

**மின்னணு ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்றுரிமையை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் கீழ், பிணையப் பற்றுரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 மற்றும் 9-இன் பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்து(களை) விற்பனை செய்வதற்கான 15 நாட்கள் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்கள்/உத்தரவாதம் அளித்தவர்கள்/அடமானம் வைத்தவர்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மோதிலால் ஓஸ்வால் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்திற்கு அடமானம் வைக்கப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, நிலுவைத் தொகைகள் மற்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக, "உள்ளபடியே", "உள்ளதை உள்ளபடியே", மற்றும் "இருப்பவை அனைத்தும்" என்ற அடிப்படையில், "ஆன்லைன் மின்னணு ஏலம்" மூலம் விற்கப்படும். இந்த விற்பனையானது, SARFAESI சட்டத்தின் பிரிவுகளின்படியும், பிணையப் பற்றுரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 மற்றும் 9-இன் படியும் நடைபெறும். கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள்:

**மின்னணு ஏலத்தின் தேதி மற்றும் நேரம்: 07-12-2026 இரவு 11:00 மணி முதல் பிற்பகல் 02:00 மணி வரை (தலா 15 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புகளுடன்)**

**முன்பணம் செலுத்துவதற்கான கடைசி தேதி: 06-12-2026**

| கடன் வாங்குபவர்(கள்)/உத்தரவாதம் அளிப்பவர்(கள்) /கடன் கணக்கு | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | அசையாச் சொத்தின் விவரம் | முன்பதிவு விலை, EMD/ EMD செலுத்துவதற்கான கடைசி தேதி |
|---|---|---|---|
| LAN: LXMAD00217-180054810கிளை: மதுரை / கடன் வாங்குபவர்: சதீஷ் சந்திரன் கூட்டுக் கடன் வாங்குபவர்: குமரேசன் சந்திரன் | 09.01.2026 / ரூ.879156/- (எட்டு இலட்சம் எழுபத்தொன்பது ஆயிரம் நூற்று ஐம்பத்தாறு ரூபாய் மட்டும்) | பழைய சர்வே எண் 197/2 புதிய சர்வே எண் 349/248349/25, இடையப்பட்டி, வடக்கு மாம்பட்டி கிராமம், சிவகங்கை, மதுரை மாவட்டம், தமிழ்நாடு. | முன்பதிவு விலை: ரூ.850000/- (எட்டு லட்சம் ஐம்பதாயிரம் மட்டும்)/ EMD: ரூ.85000/- (எண்பத்தைந்தாயிரம் மட்டும்) |
| LAN: LXSAL00417-180055036 கிளை: சேலம் /கடன் வாங்குபவர்: கண்ணன் EE/ கூட்டுக் கடன் வாங்குபவர்: எருசகவுண்டர் C | 20.07.2021 / ரூ.735045/- (ஏழு இலட்சம் முப்பத்தைந்தாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய் மட்டும்) | சர்வே எண் 212/11, 12, கதவு எண்.752/110B, பட்டா எண் - 1482, பெரியாண்டியூர், அரூர்பட்டி, தாரமங்கலம், சேலம், தமிழ்நாடு 636502 | முன்பதிவு விலை: ரூ.14,00,000/- (பதினான்கு லட்சம் மட்டும்) / EMD: ரூ.1,40,000/- (ஒரு லட்சம் நாற்பதாயிரம் மட்டும்) |
| LAN: LXVEL00417-180064913 கிளை: வேலூர் /கடன் வாங்குபவர்: சேகர் அய்யனார் /கூட்டுக் கடன் வாங்குபவர்: செல்வகுமார் சேகர் | 20.12.2021/ ரூ.885041/- (எட்டு இலட்சம் எண்பத்தைந்தாயிரத்து நாற்பத்தொன்று ரூபாய் மட்டும்) | -பழைய சர்வே எண்.-42/1 இல், புதிய சர்வே எண்.- 104/15, கொளக்குடி கிராமம், கோவக்குடி பேருந்து நிறுத்தம் மற்றும் பெருமாள் கோயில் அருகில், திருவண்ணாமலை, தமிழ்நாடு - 606808 | முன்பதிவு விலை: ரூ.5,20,000/- (ஐந்து லட்சம் இருபதாயிரம் மட்டும்) / EMD: ரூ.52,000/- (ஐம்பத்திரண்டு ஆயிரம் மட்டும்) |
| LAN: LXVEL00417-180061532 கிளை: வேலூர் /கடன் வாங்குபவர்: ரவிச்சந்திரன் D/ கூட்டுக் கடன் வாங்குபவர்: சங்கீதா R | 18.06.2024 / ரூ.1021372/- (பத்து இலட்சம் இருபத்தொன்றாயிரத்து முன்னூற்று எழுபத்திரண்டு ரூபாய் மட்டும்) | எஸ் எண்.682/46 பஞ்சூர் கிராமம் நாட்றம்பள்ளி தாலுக்கா வேலூர் மாவட்டம் 0 0 635854 திருப்பத்தூர் வேலூர் தமிழ்நாடு | முன்பதிவு விலை: ரூ.5,00,000/- (ஐந்து லட்சம் மட்டும்) / EMD: ரூ.50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) |
| LAN: LXVEL00217-180067613 கிளை: வேலூர் /கடன் வாங்கியவர்: கோகுல்ராஜ் முருகன் / இணை- கடன் வாங்கியவர்: முருகன் வெடி | 10.12.2020 / ரூ.837060/- (எட்டு இலட்சம் முப்பத்தேழாயிரத்து அறுபது ரூபாய் மட்டும்) | எஸ்.எஃப். எண்ணில் 237/4, எலவம்பாடி, கிராமம் திருப்பத்தூர் Tk, பாச்சல் கோயில் அருகில், வேலூர், தமிழ்நாடு 635602 | முன்பதிவு விலை: ரூ.960000/- (ஒன்பது லட்சம் அறுபதாயிரம் மட்டும்) / EMD: ரூ.96000/- (தொண்ணூற்றாறு ஆயிரம் மட்டும்) |
| LAN: LXKAN00217-180062081 கிளை: காஞ்சிபுரம்கடன் வாங்கியவர்: பிரகாஷ்கணணசெல்வம் / இணைகடன் வாங்கியவர்: கணணசெல்வம் முனிரத்தினம் | 14.09.2021/ ரூ.681973/- (ஆறு இலட்சம் எண்பத்தொரு ஆயிரம் ஒன்பது நூற்று எழுபத்து மூன்று ரூபாய் மட்டும்) | பிளாட் எண் 135, சர்வே எண் 305/5, திருவள்ளுவர் நகர், பணப்பாக்கம் கிராமம், வேலூர், தமிழ்நாடு - 600054 | முன்பதிவு விலை: ரூ.600000/- (ஆறு லட்சம் மட்டும்) / EMD: ரூ.60000/- (அறுபதாயிரம் மட்டும்) |
| LAN: LXMAD00217-180068633 கிளை: மதுரை / கடன் வாங்கியவர்: சுதன்குமார்தர்மர் / இணை கடன் வாங்கியவர்: சுசீலா தர்மர் | 20.07.2021/ ரூ.639462/- (ஆறு இலட்சம் முப்பத்தொன்பதாயிரத்து நானூற்று அறுபத்து இரண்டு ரூபாய் மட்டும்) | பழைய நத்தம் எஸ் எண் 126/4 பகுதி, புதிய எஸ் எண் - 321/19, பட்டா எண் -42, கச்சத்தநல்லூர் கிராமம் மற்றும் குழு, இளையான்குடி, சிவகங்கை, ராமநாதபுரம், தமிழ்நாடு 623707 | முன்பதிவு விலை: ரூ.480000/- (நான்கு லட்சம் எண்பதாயிரம் மட்டும்) / EMD: ரூ.48000/- (நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) |
| LAN: LXTRI00217-180069081 கிளை: திருச்சி /கடன் வாங்கியவர்: K ரமேஷ்கருப்பையா / இணை கடன் வாங்கியவர்: பிச்சையம்மாள் கருப்பையா | 10.09.2025 / ரூ.417630/- (நான்கு இலட்சம் பதினேழு ஆயிரம் அறுநூற்று முப்பது ரூபாய் மட்டும்) | எஸ்.எஃப்.எண். 220/11A, ஏரியா விளம்பர அளவு 3230 சதுர அடி, பிடாரம்பட்டி குன்னத்தூர் கிராமம் & பஞ்சாயத்து இலுப்பூர் தாலுக்கா புதுக்கோட்டை மாவட்டம் 400066 மும்பை திருச்சி தமிழ்நாடு | முன்பதிவு விலை: ரூ. 180000/- (ஒரு லட்சம் எண்பதாயிரம் மட்டும்) / EMD: ரூ.18000/- (பதினெட்டாயிரம் மட்டும்) |
| LAN: LXMOTHIRLR721-220595153 கிளை: திருவள்ளூர் / கடன் வாங்கியவர்: கௌதமி அன்பரசு / இணை கடன் வாங்கியவர்: அன்பரசு குமார் | 09.02.2023 / ரூ.798824/- (ஏழு இலட்சம் தொண்ணூற்று எட்டு ஆயிரம் எண்ணூற்று இருபத்து நான்கு ரூபாய் மட்டும்) | 14கதவு எண்/14, நேதாஜி தெரு, புதிய எஸ்/எண்/1274/18, காந்தி நகர், தக்கோலம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, தக்கோலம் பேருந்து நிறுத்தம், வேலூர், தமிழ்நாடு 631151 | முன்பதிவு விலை: ரூ.850000/- (எட்டு லட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) / EMD: ரூ.85000/- (எண்பத்தைந்தாயிரம் மட்டும்) |
| LAN: LXMOSALEM5523-240718206 கிளை: சேலம் / இணை- கடன் வாங்கியவர்: ராசாத்தி கார்த்திக்கடன் வாங்கியவர்: கார்த்திக் கிருஷ்ணன் | 06.02.2025 / ரூ.1446847/- (பதினான்கு இலட்சம் நாற்பத்து ஆறு ஆயிரம் எண்ணூற்று நாற்பத்து ஏழு ரூபாய் மட்டும்) | ச.எண்43/3 8வது வார்டு (பழையது) 9வது வார்டு (புதிய) பழனிதை காலனி தோரமங்கலம் கிராமம் மேட்டூர் தாலுகா ஜலகண்டாபுரம் எஸ்ரோ சேலம் மேற்கு சேலம் 0 0 தண்ணீர் தொட்டி அருகில் 636501 சேலம் தமிழ்நாடு | முன்பதிவு விலை: ரூ.1500000/- (பதினைந்து லட்சம் மட்டும்) / EMD: ரூ. 150000/- (ஒரு லட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) |
| LAN: LXMOSALEM5424-250765411கிளை: சேலம் / கடன் வாங்குபவர்: ராஜ்குமார் நல்லதம்பி / இணை கடன் வாங்குபவர்: லதா ராஜ்குமார் | 11.03.2026 / ரூ.716021/- (ஏழு இலட்சம் பதினாறாயிரத்து இருபத்தி ஒன்று ரூபாய் மட்டும்) | பழைய சர்வே எண்: 333/1 புதிய சர்வே எண்: 333/1R தும்பல் கிராமம் பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா சேலம் தமிழ்நாடு | முன்பதிவு விலை: ரூ.520000/- (ஐந்து இலட்சம் இருபதாயிரம் மட்டும்) / EMD: ரூ.52000/- (ஐம்பத்திரண்டு ஆயிரம் மட்டும்) |
| LAN: LXMOTRICHY5424-250797933கிளை: திருச்சி / கடன் வாங்குபவர்: அரவிந்த் எஸ் / இணை கடன் வாங்குபவர்: தமிழரசி சக்கரதன் | 10.04.2026 / ரூ.2403375/- (இருபத்தி நான்கு இலட்சம் மூவாயிரத்து முந்நூற்று எழுபத்தி ஐந்து ரூபாய் மட்டும்) | பிளாட் எண் A, தரைத்தளம் 03, பிளாக் எண் தளம், பரப்பளவு 740 சதுர அடி, இடம்: ஈஸ்வர் பில்டர் A பிளாக், பிச்சடர்கோவில் கிராமம், மணச்சநல்லூர் தாலுகா, மாவட்டம் திருச்சிராப்பள்ளி | முன்பதிவு விலை: ரூ.2200000/- (இருபத்திரண்டு இலட்சம் மட்டும்) / முன்பணம்: ரூ.220000/- (இரண்டு இலட்சம் இருபதாயிரம் மட்டும்) |

1. ஏல ஆவணத்தில் உள்ள கூடுதல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படியும் ஏலம் நடத்தப்படுகிறது. ஏலதாரர்கள், ஏலத் தகவல் மற்றும் ஆதரவு, மின்-ஏலத்திற்கு வைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள் மற்றும் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப் படிவம் ஆகியவற்றைப் பெற, எங்களின் மின்-ஏல சேவை வழங்குநரான M/s.கிரெட்ரிசொல்யூஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் credauction.com என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். ஆர்வமுள்ள வாங்குபவர்கள் அதே இணையதளத்தில் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் செயல்முறையைப் பார்க்கலாம். மேலும், மேலே குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் கிடைக்கும் விவரங்களின்படி ராஜசேகரன் K 9025136986, ஆறுமுககுமார் V 9677997577, செந்தில்குமார் ஏ என் 9789244810, சரத்குமார் சின்னப்பையன் 9003632804 ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம். மேலும், அவர்களின் மையப்படுத்தப்பட்ட உதவி மையத்தை +91 9137100020 என்ற எண்ணிலோ அல்லது balram@credsolv.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

இடம்: தமிழ்நாடு / தேதி: 07.11.2026

கையொப்பம்/-, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், மோதிலால் ஓஸ்வால் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என அறியப்பட்டது)

*மொழிபெயர்ப்பில் வேறுபாடு ஏற்படும்பட்சத்தில், ஆங்கிலப் பதிப்பே செல்லுபடியாகும்.

வழிப்பறி வழக்கில் பிடிபட்டபின்

# போலீஸ் பிடியில் இருந்து சிறுவன் தப்பி ஓட்டம்

## வானகரத்தில் பரபரப்பு

பூந்தமல்லி, நவ,7

வானகரத்தில் வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்ட சிறுவனை போலீஸ் நிலையத்திற்கு உள்ளே அழைத்து சென்ற போது, தப்பி ஓடிவிட்டான்.

சென்னை மேற்கு முகப்பேர் பகுதியைச் சேர்ந்தவர் மதன் குமார் ( வயது 22 ) இவர் கடந்த 4–ஆம் தேதி அதே பகுதியில் தாம்பரம் செல்ல நடந்து சென்றார்.

அப்போது அவ்வழியாக பைக்கில் வந்த 2 பேர் மதன்குமாரிடம் எங்கே நடந்து செல்கிறீர்கள் என்று கேட்டு உள்ளனர்.

தாம்பரம் செல்ல வேண்டும். அதற்காக பஸ் நிலையம் செல்கிறேன் என அவர் கூறியுள்ளார். அப்போது பைக்கில் வந்தவர்கள் நாங்கள் மதுரவாயல் பகுதிக்கு செல்கிறோம் அங்கே இறங்கி கொள்ளுங்கள், அங்கிருந்து தாம்பரத்திற்கு அடிக்கடி பஸ் வரும் என கூறியுள்ளனர்.

இதனால், மதன் குமார் அந்த பைக்கில் ஏறிக் கொண்டார். பைக் அடையாளம்பட்டு சர்வீஸ் சாலையில் சென்ற போது, பைக் நிறுத்தப்பட்டது. உடனே பைக்கில் வந்தவர்கள் மதன் குமாரை மிரட்டி பணம் கேட்டனர். பணம் இல்லை என்று சொன்ன போது, செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இதுபற்றி மதன் குமார் வானகரம் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். மேலும் சிசிடிவி காட்சி பதிவுகளை ஆய்வு செய்தனர்.

பின்னர், வழிப்பறியிலா ஈடுபட்ட நொளம்பூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் ( வயது 20) 17 வயது சிறுவன் ஆகிய இருவரையும் கைது செய்து, வானகரம் காவல் நிலையம் அழைத்து வந்தனர். பின்னர் இருவரையும் காவல் நிலையம் உள்ளே அழைத்து சென்ற போது , சிறுவன் மின்னல் வேகத்தில் தப்பி ஓடிவிட்டான். உடனே போலீசார் அவரை துரத்தி பிடிக்க முயன்ற போது சிறுவன் தலைமறைவாகி விட்டான்.

இதுபற்றி வானகரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எஞ்சியுள்ள 2 பேரை மீட்க

# கடற்படைக்கப்பல் மூலம் தேடுதல் வேட்டை

## தமிழக அமைச்சர் மரியவில்சன் ஆந்திராவில் முகாம்

சென்னை, நவ. 7–

ஆந்திராவை தாக்கிய முரசு புயலில் சிக்கி இது வரை சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த 7 மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் கடலுக்குள் சென்றவர்களில் எஞ்சியுள்ள 2 பேரை மீட்க கடற்படை கப்பல் மூலம் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக தமிழக நிதி அமைச்சர் மரியவில்சன் ஆந்திராவில் முகாமிட்டுள்ளார்.

சென்னை காசிமேடு மீன்பிடித்துறைமுகத்தில் இருந்து கடந்த அக்டோபர் 29–ஆம் தேதி, காசிமேட்டைச் சேர்ந்த செல்வழகன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் 9 மீனவர்கள் ஆழ்கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர். அந்த படகின் ஓட்டுநர் சூர்யா(49), தண்டையார்பேட்டையைச் சேர்ந்த குப்பன் (48), முருகன் (48), காசிமேட்டைச் சேர்ந்த மோகன் (47), அரவிந்தன் (40), திருவொற்றியூரைச் சேர்ந்த ராஜேஷ் (52), விஜயகாந்த் (44), காசிபுரம் பி பிளாக்கைச் சேர்ந்த குப்புசாமி (58), கடலூரைச் சேர்ந்த நாராயணன் (57) ஆகியோர் இருந்தனர். இவர்கள் ஆந்திரமாநிலகடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, 'முரசு' புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, மீனவர்கள் தங்களது விசைப் படகைப் பாதுகாப்பாக ராமயபட்டினம் கடற்கரையில் நிறுத்தினர். பின்னர் மீண்டும் மீன் பிடிக்க சென்றபோது, படகின் என்ஜினில் திடீரென பழுது ஏற்பட்டது.

இதுகுறித்து கடந்த 3–ஆம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் அருகில் இருந்த மற்றொரு விசைப் படகுக்கு வயர்லெஸ் மூலம் அவர்கள் தகவல் தெரிவித்துள் ளனர். அதன் பின்னர் 9 மீனவர்களையும் தொடர்புகொள்ள முடியவில்லை. இதையடுத்து, கடலோரக் காவல் படையினர் கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் மூலம் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். முன்னதாக கடலுக்குச் மீன்பிடிக்கச் சென்றவர்கள் வீடுதிரும்பாததால் மாயமான மீனவர்களின் குடும்பத்தினர் காசிமேடு பகுதியில் நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தான் மீனவர்களின் உடல்கள் ஆந்திராவில் கரை ஒதுங்கிய தகவல் வெளியானது. அறிந்த அமைச்சர் மரியவில்சன் காசிமேடு பகுதிக்கு நேரில் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடனடியாக அவர் மீனவளத்துறை இணை இயக்குநர் இளங்கோ, உதவி இயக்குநர் ஜேசு ஜாக்சன் பெக்கர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆந்திர மாநிலம் கொத்தபட்டனம் சென்று அங்கு முகாமிட்டுள்ளார்.

மேலும் காணாமல் போன மீனவர்களை தேடும் பணியை முடுக்கி விட்டுள்ளார். அங்கு மீனவர்களை தேடும் பணியில் காசிமேடு பகுதியில் இருந்து சென்ற மீன்வளத் துறைக்கு சொந்தமான ஒரு படகு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆந்திர மாநில கடல் பகுதியில் கடலோர பாதுகாப்பு படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தவிர ஒரு படகும் அந்த பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது.

இதற்கிடையே, ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டம் கொத்தபட்டினம் அருகே கடற்கரையில் 5 மீனவர்களின் உடல்கள் கரை ஒதுங்கியதாகக் கூறப்பட்டது. மேலும், கடற்கரையில் இருந்து 5 கி.மீ. தொலைவில் மாயமான மீனவர்கள் சென்ற விசைப் படகு கடலில் கவிழ்ந்து கிடப்பதை கடலோரக் காவல் படையினர் கண்டறிந்தனர். இதற்கிடையே கரை ஒதுங்கிய உடல்களில் முதலில் விஜயகாந்த், மோகன், முருகன் ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்றவர்களின் உடல்களை அடையாளம் காண்பதற்காக தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஆந்திர மாநிலத்துக்கு விரைந்துள்ளனர். எஞ்சிய 4 மீனவர்களைத் தேடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. 3 பேரின் உடல்கள் கரை ஒதுங்கின. அதைத் தொடர்ந்து இது வரை மாயமான 9 மீனவர்களில் 7 பேரின் உடல்கள் கரை ஒதுங்கி உள்ளன. இவர்களில் மோகன், முருகன், விஜயகாந்த், படகு ஓட்டுநர் சூர்யா மற்றும் குப்புசாமி ஆகிய 5 பேரின் உடல்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்ற 2 பேரின் உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைந்துள்ளன. இவர்களின் உடல்கள் அதிக நாள்கள் கடல் நீரில் கிடந்ததால் உப்பிய நிலையிலும், மீன்கள் கடித்து குதறிய நிலையிலும் காணப்படுகின்றன.

இதற்கிடையே இறந்த மீனவர்கள் 7 பேரின் உடல்களை சென்னைக்கு கொண்டு வரும் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் நிதியமைச்சர் மரிய வில்சன் ஈடுபட்டுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: புயலில் சிக்கி இறந்த மீனவர்களில் இது வரை 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணியில் கடலோர கடற்படைக் கப்பல் மற்றும் 2 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தமிழக மீன்வளத்துறை அதிகாரிகளும் என்னுடன் இங்கு முகாமிட்டுள்ளனர். மீனவர்களை தேடும் பணியில் ஆந்திர மாவட்ட ஆட்சித் தலைவரும், மீன்வளத்துறையினரும் உதவி புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்த 7 மீனவர்களின் உடல்கள் இன்று சென்னைக்கு கொண்டுவரப்படுகின்றன. மேலும் உடனடியாக பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு அவர்களது உடல்கள் உறவினர்களிடம் வழங்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் விஜயின் உத்தரவுப்படி எஞ்சியவர்களை தேடும் பணி மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றி வீடு கட்டும் திட்டத்தின் கீழ்

# 70 ஆயிரம் வீடுகள் கட்ட ரூ.3500 கோடி ஒதுக்கீடு

## தமிழக அரசு அரசாணை வெளியிட்டது

சென்னை, நவ.7–

வெற்றி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 70 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு ரூ.3,500 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

குடிசைகளில் வாழும் ஊரகக் குடும்பங்களுக்கு நிரந்தர உறுதியான வீடுகள் வழங்கும் நோக்கில் 2026–27 தமிழ்நாடு திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 'வெற்றி வீடு கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

அதன் படி ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மற்றும் நலிவடைந்த மக்களுக்கு சொந்த வீடு வழங்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ளது. 'வெற்றி தமிழகம்' தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் மொத்தம் 5 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு வீடுகட்டுவதற்கு ரூ.5 லட்சம் வழங்கப்படும். குடிசை வீடுகள், மண்சுவர்கள் மற்றும் உறுதியற்ற கூரைகளைக் கொண்ட வீடுகளில் வசிப்போருக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும். இதில் கூடுதல் நிதி தேவைப்படுவோருக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் ரூ.50,000 வரை 6 சதவீத வட்டியில் சமூக முதலீட்டு நிதிக் கடன் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

இது குறித்து ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது,

'வெற்றி தமிழகம்' தொலைநோக்குத் திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் ஏழை மற்றும் நலிவடைந்த மக்களுக்கு 5 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 2026–27ம் நிதியாண்டில் 70,000 வீடுகள் கட்ட 'வெற்றி வீடு திட்டம்' செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒரு வீட்டுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். குறைந்தபட்சம் 360 சதுர அடி முதல் அதிகபட்சம் 500 சதுர அடி வரை சமையலறையுடன் வீடுகள் கட்டிக்கொள்ளலாம். அனைத்து வீடுகளும் கான்கிரீட் கூரையுடன் இருக்க வேண்டும்.

குடிசை வீடுகள், மண் சுவா்கள் மற்றும் உறுதியற்ற கூரைகளைக் கொண்ட வீடுகளில் வசிப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயனாளிகளைத் தோ்வு செய்ய ஊரகப் பகுதிகளில் மொபைல் செயலி மூலம் வீடு வீடாகக் கணக்கெடுப்பு நடத்தப்படும். அதன் அடிப்படையில் தயாரிக்கப்படும் முதற்கட்டப் பட்டியல் கிராம ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்கள் பாா்வைக்கு வைக்கப்படும். இறுதிப்பயனாளிகள் பட்டியல் ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் அரசின் இணையதளத்திலும் வெளியிடப்படும்.

இருப்பினும், முதல் கட்டமாகக் கட்டப்படும் 70,000 வீடுகளுக்கான பயனாளிகளை, ஊரக வளா்ச்சித் துறையிடம் ஏற்கெனவே உள்ள வீடற்றோா் பட்டியலில் இருந்து தோ்வு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்கான கட்டுமானப் பொருள்கள் பயனாளிகளின் வசதிக்கேற்ப இரண்டு கட்டங்களாக வழங்கப்படும். கூடுதல் நிதி தேவைப்படுவோா் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் ரூ.50,000 வரை 6 சதவீத வட்டியில் சமூக முதலீட்டு நிதிக் கடன் பெறலாம்.

கூட்டுறவு அல்லது வணிக வங்கிகள் மூலம் ரூ.1 லட்சம் வரை வீட்டுக் கடனும் பெறலாம். இந்தக் கடன்களுக்கு ஆண்டுக்கு 3 சதவீத வட்டி மானியத்தை அதிகபட்சம் 15 ஆண்டுகள் வரை அரசு வழங்கும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் பின்னா் வெளியிடப்படும். தனிநபா் கழிப்பறை வசதி இல்லாத தகுதியுள்ள பயனாளிகளுக்கு தூய்மை பாரத இயக்கம் ஊரகம் திட்டத்தின் கீழ் ரூ.12,000 செலவில் கழிப்பறை கட்டித் தரப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒதுக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையில் 5 சதவீதம் மாவட்ட ஆட்சியரின் விருப்ப ஒதுக்கீடாக இருக்கும். இயற்கைப் பேரிடா்களால் பாதிக்கப்பட்டவா்கள், கணக்கெடுப்பில் விடுபட்ட தகுதியான பயனாளிகள் ஆகியோருக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.3,500 கோடியில் மாநில அரசின் நிதியாக ரூ.2,600 கோடியும், கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.900 கோடியும் பயன்படுத்தப்படும்.

இந்த ரூ.900 கோடியை மாதாந்திர தவணைகளில் பிடித்தம் செய்ய ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 202627 முதல் 203031ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதையும், வீடுகள் தரமாகக் கட்டப்படுவதையும் உறுதி செய்து, திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அரசுக்கு சமா்ப்பிக்குமாறு ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் அருகே

# வேன் மீது பஸ் மோதி 2 பெண்கள் பரிதாப சாவு

## மேலும் ஒரு பெண் உயிர் ஊசல், மற்றொரு விபத்தில் ஒருவர் பலி

மாமல்லபுரம், நவ.7

மாமல்லபுரம் அருகே மாடு குறுக்கே வந்ததால் நிலைதடுமாறிய ஓடிய வேன் மீது அரசு பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் 2 பெண்கள் பரிதாபமாக இறந்தனர். 9 பெண்கள் காயமடைந்தனர். செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கம் அருகில் உள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த 13 பெண்களை ஏற்றிக் கொண்டு தனியார் கம்பெனி(பட்டர்பிளை கம்பெனி) வேன் ஒன்று பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள பையனூர் வழியாக கேளம்பாக்கம் நோக்கி அந்த சென்று கொண்டிருந்தது. அப்போது பையனூரில் மாடு குறுக்கே வந்ததால், அதன் மீது மோதிய அந்த வேன் பிறகு டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் தறிக்கப்பட்டு ஓடியது. அப்போது எதிர் திசையில் திருப்போரூரில் இருந்து மாமல்லபுரம் நோக்கி வந்த அரசு பேருந்து மீது வேன் மோதியதில் தூக்கி வீசப்பட்டு வேன் உருக்குளைந்து போனது. பஸ்சின் முன் பக்க கண்ணாடி உடைந்து சேதமடைந்தது. இதில் வேனில் பயணம் செய்த கூவத்தூர் அடையாளச்சரியை சேர்ந்த ஜெயலட்சுமி (வயது40), கல்பாக்கம் அடுத்த பெருமாள்சேரியை துர்காலட்சுமி (வயது34):ஆகிய 2 பேர் உயிரிழந்தனர். இதில் ஓதியூர் கிராமத்தை சேர்ந்த ஐஸ்வர்யா(25) என்ற பெண்ணுக்கு அம்மா பேட்டை தனியார் மருத்துவமனையில் மிகவும் கவலைக்கிடமான நிலையில் அங்கு மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். மேலும் லேசான காயமடைந்த 9 பெண்களும் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இறந்த 2 பெண்கள் உள்ளிட்ட காயமடைந்த பெண்கள் அனைவரும் கேளம்பாக்கம் பட்டர்பிளை கம்பெனியில் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து வருபவர்கள் என்று கூறப்படுகிறது. இந்த விபத்து காரணமாக பையனூர் பழைய மாமல்லபுரம் சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து மாமல்லபுரம் டி. எஸ்.பி. அறிவழகன் மேற்பார்வையில், மாமல்லபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் மற்றும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

மற்றொரு விபத்து

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே அண்டராய நல்லூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் திருச்செல்வன் (வயது 17). இவரும், இவருடைய தாயார் வளர்மதி (வயது 42) என்பவரும் கூவாகம் கிராமத்தில் உள்ள உறவினர் அய்யப்பன் என்பவரின் மகன் சபரி (வயது 10) ஆகிய மூவரும் சேர்ந்து ஒரே பைக்கில் திருவெண்ணைநல்லூருக்கு சென்று கொண்டிருந்தனர். அண்டராய நல்லூர் வீரன் கோவில் அருகே சாலையோரம் நின்று கொண்டிருந்த வேன் மீது பைக் மோதியது. இந்த விபத்தில் திருச்செல்வன் சம்பவ இடத்திலேயே இறந்தார். சபரி படுகாயம் அடைந்தான்.


IKF Home Finance

**IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**

ஈக்வினாக்ஸ் பை ஃபீனிக்ஸ்-டவர் 3, 10வது தளம், டைமண்ட் ஹில்ஸ், லும்பினி அவென்யூ, ராய் துர்க், கச்சிபௌலி, ஹைதராபாத் தெலங்கானா - 500081

**அசையாச் சொத்துக்கான உடைமை அறிவிப்பு [(பின்னிணைப்பு IV) விதி 8(1)]**

ஏனெனில்கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (2002-இன் 54)-இன் கீழ், IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் "IKF" எனக் குறிப்பிடப்படும்)-இன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராகவும், பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, கடன் வாங்கியவர்களான (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) உங்களை, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதன் மீதான வட்டியையும், அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு அழைத்துள்ளேன். கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (4)-உடன், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8-ஐயும் சேர்த்து எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கீழ்க்கையொப்பமிட்டவர் தன் வசப்படுத்தியுள்ளார். குறிப்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளும், பொது மக்களும் அந்தச் சொத்துடன் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், அந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான "IKF" கட்டணமும், அதன் மீதான வட்டியும் விதிக்கப்படும்.

| வ. எண் | கடன் வாங்குபவர்(கள்) / உத்தரவாதம் அளிப்பவர்(கள்) பெயர் LAN | சொத்து / பிணையச் சொத்தின் விவரம் | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | உடைமை தேதி |
|---|---|---|---|---|
| 1 | LAN:- LXKRI02124-250012529<br>1. திரு/திருமதி. பழனிசாமி மாரியப்பன்<br>2. திரு/திருமதி. வனிதா கோவிந்தசாமி<br>முகவரி: 1-16/B, அனகோடி கிராமம், போச்சம்பள்ளி, மகாதேவகொல்லஹள்ளி, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு -635206. | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், போச்சம்பள்ளி துணைப் பிரிவு பதிவு மாவட்டம், மகாதேவகொல்லஹள்ளி கிராமம், பழைய சர்வே எண் 795/9, இந்தப் புதிய துணைப் பிரிவில் உள்ள நத்தம் சர்வே எண் 795/9C, உலர் பரப்பளவு ஹெக்டேர் 0.03.50, மதிப்பீட்டு விலை ரூ.0.08, 0.09 ஏக்கர் சென்ட் பரப்பளவு கொண்டது, இதன் எல்லைகள் பின்வருமாறு:- தெற்கே: பொதுச் சாலை, வடக்கே: திரு. சந்திரமோகனுக்குச் சொந்தமான நிலம், மேற்கே: திரு. ஜெயபிரகாஷுக்குச் சொந்தமான நிலம், கிழக்கே: திரு. ரவிச்சந்திரனுக்குச் சொந்தமான நிலம், இதன் நடுவில் 0.09 ஏக்கர் சென்ட் பரப்பளவுள்ள நிலத்தில் ஆர்சிசி. கட்டிடம் கட்டப்பட்டுள்ளதுடன், பொது வழி மற்றும் அனைத்து சலுகை உரிமைகளும் உள்ளன. இந்தச் சொத்து மகாதேவகொல்லஹள்ளி கிராமப் பஞ்சாயத்து எல்லைகள் மற்றும் பர்கர் ஒன்றிய மன்றத்தின் கீழ் வருகிறது. | 17-08-2026<br>ரூ. 21,86,977.62/-<br>(இருபத்தி ஒரு இலட்சம் எண்பத்தி ஆறு ஆயிரம் ஒன்பது நூற்று எழுபத்தி ஏழு மற்றும் அறுபத்தி இரண்டு பைசா மட்டும்) | 05-11-2026 |

இடம்: தமிழ்நாடு
தேதி: 05-11-2026

கையொப்பம்/-அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக

Bandhan Bank

மண்டல அலுவலகம்: நேதாஜி மார்க், மிதாகலி சிக்ஸ் ரோடு அருகில், எல்லிஸ்பிரிட்ஜ், அகமதாபாத்-6. தொலைபேசி: +91-26421671-75

**குறியீட்டு உடைமை அறிவிப்பு**

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ் மற்றும் பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிற்கு எதிராகக் குறிப்பிடப்பட்ட தேதியில் கடன் வாங்கியவர்களுக்குக் கோரிக்கை அறிவிப்பை வழங்கினார். அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், பொதுமக்களுக்கும் குறிப்பாகக் கடன் வாங்கியவர்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே கையொப்பமிட்ட நான், கணக்கிற்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், அந்த விதிகளின் விதி 8-உடன் சேர்த்துப் படிக்கப்படும் அந்தச் சட்டத்தின் பிரிவு 13(4)-இன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் குறியீட்டு உடைமையை எடுத்துள்ளேன். குறிப்பாகக் கடன் வாங்கியவரும், பொதுவாகப் பொதுமக்களும் இந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், இந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும், அதற்கான தொகைகள், வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் வங்கியின் கட்டணத்திற்கு உட்பட்டவை ஆகும். பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு உள்ள கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிமுறைகளுக்குக் கடன் வாங்கியவர்கள்/அடமானம் வைத்தவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

| கடன் வாங்குபவர்(கள்), ஜாமீன்தாரர் மற்றும் கடன் கணக்கு எண்கள். | அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரம் (பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள்) | கோரிக்கை அறிவிப்பின் தேதி | குறியீட்டு உடைமை அறிவிப்பின் தேதி | கோரிக்கை அறிவிப்பு தேதியின்படி நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1. வெங்கடாசலபதி S - கடன் வாங்குபவர் & அடமானம் வைப்பவர்<br>2. P தமிழ்செல்வி - இணை-கடன் வாங்குபவர் 1<br>3. P கிருஷ்ணமூர்த்தி - ஜாமீன்தாரர் 1<br>20009370001254 | பழனி பதிவு மாவட்டம், வடமதுரை துணைப் பதிவு மாவட்டத்தின் அதிகார வரம்பிற்குள், தென்னம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள, நத்தம் சர்வே எண் 550/3-ஐ உள்ளடக்கிய, வடக்குப் பக்கம் 15 அடி, தெற்குப் பக்கம் 13% அடி, கிழக்குப் பக்கம் 23% அடி மற்றும் மேற்குப் பக்கம் 14% அடி என மொத்தம் 270% சதுர அடி பரப்பளவுள்ள சொத்துத் துண்டு மற்றும் அதன் மீது கட்டப்பட்ட, கதவு எண் 5/432,624802 கொண்ட குடியிருப்பு கட்டிடம் ஆகியவை அடங்கியது. இது செல்வராஜின் மகன் திரு. எஸ். வெங்கடாசலபதிக்கு சொந்தமானது. மேலும் இது பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது: வடக்கே ஒரு சாலையாலும், கிழக்கே பழனிசாமி மற்றும் பாக்யம் ஆகியோருக்குச் சொந்தமான வீட்டாலும், மேற்கே வேலுசாமிக்குச் சொந்தமான வீட்டாலும், தெற்கே வேலுசாமிக்குச் சொந்தமான நிலத்தாலும் சூழப்பட்டுள்ளது. | 14 ஆகஸ்ட் 2026 | 04 நவம்பர் 2026 | ரூ.6,61,864.18/- |
| 1. காமராஜ் P - கடன் வாங்குபவர்<br>2. K. மீனா - இணை-கடன் வாங்குபவர் 1 & அடமானம் வைப்பவர் 1<br>3. P. சந்திர சேகர் - உத்தரவாத மளிப்பவர் 1<br>20009370001253 | திண்டுக்கல் பதிவு மாவட்டம் மற்றும் திண்டுக்கல் இணை எண் II துணைப் பதிவாளர் அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குள், திண்டுக்கல் கிழக்கு தாலுக்காவில் உள்ள பெரியகோட்டை கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 451/6a1-இல் அடங்கியுள்ள, பட்டா எண் 3583-இன் கீழ் வரும் 50 சென்ட் பெரிய நிலப்பரப்பில், 16 சென்ட் கொண்ட வடக்குப் பகுதியான சொத்து. பரப்பளவு - 6970 சதுர அடி, 624306. திருமதி கே. மீனா, காமராஜின் மனைவி, -, -க்குச் சொந்தமானது. மேலும் இது பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது: வடக்கே சின்னவெள்ளையனின் வீடு, கிழக்கே 12 அடி நடைபாதை, மேற்கே லட்சுமியின் சொத்து, தெற்கே ஸ்ரீரங்கத்தின் சொத்து. | 19 ஆகஸ்ட் 2026 | 04 நவம்பர் 2026 | ரூ.16,92,106.77/- |
| 1. கோவிந்தராஜ் P - கடனாளி & அடமானம் வைப்பவர் 12. B. மாரியம்மாள் இணை-கடனாளி 13. B. பாலமுருகன் - இணை-கடனாளி 24. P. மணிகண்டன் ஜாமீன்தாரர் 1<br>20009370000855 | திண்டுக்கல் பதிவு மாவட்டத்தில், திண்டுக்கல் கிழக்கு தாலுக்காவில் உள்ள சனார்பட்டியில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குள், ராகலபுரம் கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 925/1b கொண்ட, மொத்தம் 0.16.50 ஹெக்டேர் (41 சென்ட்) பரப்பளவின் ஒரு பகுதியாக உள்ள சொத்து. இதில், 22 சென்ட் பரப்பளவுள்ள கிழக்குப் பகுதியும், மேற்குப் பகுதியின் தென்புறத்தில் உள்ள 0.03% சென்ட் (0.01.32 ஹெக்டேருக்குச் சமம்) பரப்பளவுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியும் பட்டியல் சொத்தாகும். பட்டா எண் 2781-இன் படி, உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் 925/11-இன் கீழ் இந்தச் சொத்து வருகிறது. அதனுடன் இணைந்த அனைத்து வழக்கமான உரிமைகள் மற்றும் துணைச் சொத்துக்களுடன், இதன் பரப்பளவு 1415.7 சதுர அடி, 624304 ஆகும். இது பகவதிராஜின் மகன் திரு. பி. கோவிந்தராஜ் என்பவருக்குச் சொந்தமானது. மேலும், இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கே அல்லது அதை நோக்கி ஒரு கிழக்கு-மேற்குச் சாலை, கிழக்கே அல்லது அதை நோக்கி ஒரு வடக்கு-தெற்குப் பாதை, மேற்கே அல்லது அதை நோக்கி மகாராஜனின் சொத்து, தெற்கே அல்லது அதை நோக்கி ஜக்கையா கவுண்டரின் சொத்து. | 27 ஜூன் 2026 | 04 நவம்பர் 2026 | ரூ.5,93,174.82/- |
| 1. ஷீலாதேவி - கடனாளி & அடமானம் வைப்பவர் 1<br>2. M. செல்வம் - இணை-கடனாளி 1<br>90001172922667 | திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல் பதிவு மாவட்டத்திற்குள், நிலக்கோட்டை துணைப் பதிவாளர் அலுவலக அதிகார வரம்பிற்குட்பட்ட, மற்றும் தமிழ்நாட்டின் நிலக்கோட்டை தாலுக்காவில் உள்ள கூவனூத்து கிராமத்தில் அமைந்துள்ள அந்த நிலப்பகுதி. இந்தச் சொத்து சர்வே எண் 292/2b - இல் அடங்கியுள்ளது மற்றும் தோராயமாக 9 சென்ட் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட வருவாய் பதிவுகள் மற்றும் உட்பிரிவின்படி, இந்தச் சொத்து மறு சர்வே எண் 292/2b 2 - இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் பட்டா எண் 1615-இன் கீழ் வருகிறது, இது சுமார் 0.03.64 ஹெக்டேர் பரப்பளவிற்குரியது. பரப்பளவு - 3918.06 சதுர அடி, 624208. செல்வம் அவர்களின் மகன் செல்வி ஷீலாதேவிக்குச் சொந்தமானது, மற்றும் அதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்குப் பகுதியில் அல்லது அதனை நோக்கியவாறு எம். பஞ்சராஜுக்குச் சொந்தமான நிலம்; கிழக்குப் பகுதியில் அல்லது அதனை நோக்கியவாறு முத்துவடன், அருணாச்சலம் மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலங்கள்; மேற்குப் பகுதியில் அல்லது அதனை நோக்கியவாறு சுடலைக்குச் சொந்தமான நிலம் மற்றும் ஒரு பொதுவான பாதை; தெற்குப் பகுதியில் அல்லது அதனை நோக்கியவாறு மீனாட்சியம்மாள் மற்றும் அருணாச்சலத்திற்குச் சொந்தமான நிலங்கள். | 27 ஜூன் 2026 | 04 நவம்பர் 2026 | ரூ.19,66,486.68/- |

இடம்: தமிழ்நாடு, தேதி: 07 நவம்பர் 2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,பந்தன் வங்கி லிமிடெட்

### போதை ஒழிப்பு நடவடிக்கை:

# 500 வங்கிக் கணக்குகள் முடக்கம் – 2000 பேர் கைது

## காஷ்மீரில் போலீசார் அதிரடி

ஸ்ரீநகர், நவ. 7 – காஷ்மீரில் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு எதிரான தீவிர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்த ஆண்டு போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1500 க்கும் மேற்பட்ட வழக்குகளை காஷ்மீர் காவல்துறை பதிவு செய்துள்ளது. மேலும், ஏறக்குறைய 2000 போதைப் பொருள் வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் பணப் பரிவர்த்தனையுடன் தொடர்புடைய 567 வங்கிக் கணக்குகளைமுடக்கியுள்ளதாக காஷ்மீர் மண்டல காவல் துறைத் தலைவர் சுஜித் குமார் வியாழக்கிழமை தெரிவித்தார். காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு தனது முதல் செய்தியாளர் சந்திப்பில் பேசிய குமார், போதைப் பொருள் வியாபாரிகளுக்குச்சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான சொத்துகள் முடக்கப்ப ட்டுள்ள தாகவும், ரூ. 1.10 கோடி ரொக்கம் மீட்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார்.

போதைப் பொருள் வியாபாரிகளுக்கு பின்னணியில் உள்ள நிதி வலைப் பின்னல்களுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக சுமார் ரூ. 1.31 கோடி மதிப்பிலான 567 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பி ட்டார். போதைப் பொருள் மற்றும் இணையவழி குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்என்று அழைப்பு விடுத்த அவர், தகவல் கொடுப்பவர்களின் அடையாளம் முற்றிலும் ரகசியமாக வைக்கப்படும் என்று உறுதி யளித்தார். போதை க்கு அடி மை யா ன வர்கள் அமைதியாக அவதிப்படாமல் காவல்துறையை யோ அல்லது மறுவாழ்வு மையத்தையோ அணுகி உதவி கோர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண் டார். இணையவழி மோசடிகள் குறித்து எச்சரித்த அவர், சமீபத்திய மாதங்களில் ரூ. 54 கோடிக்கும் அதிகமான மோசடி புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அதில் சுமார் 13 முதல் 14 சதவீதம் வரை மீட்கப்பட்டு, பாதிக்கப் பட்டவர்களுக்கு ரூ. 7 கோடிக்கும் மேல் திருப்பி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சொந்த மக்களையே ஏமாற்றுவது தவறு என்றும், இது போன்ற செயல்களில் ஈடு பட வேண்டாம் என்றும் இளைஞர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

### கர்நாடகத்தில் பஸ் கட்டண உயர்வுக்கு கடும் கண்டனம்

# அறிவிப்பை உடனடியாக திரும்ப பெறக் கோரி பா.ஜ.க. போராட்டம்

## போக்குவரத்து துறைக்கு ரூ.600 கோடி வழங்க வலியுறுத்தல்

பெங்களூரு, நவ. 7: கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் அரசு கொண்டு வந்துள்ள பேருந்து கட்டண உயர்வுக்கு கடும்கண்டனம் தெரிவித்து எதிர்க் கட்சியான பாஜக வியாழக்கிழமை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டது. மேலும், உயர்த்தப்பட்ட இந்த கட்டணத்தை உடன டியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியு றுத்தியது.

சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் ஆர். அசோக் தலைமையில் பாஜக தலைவர்கள் கெம் பேகவுடா பேருந்து நிலை யத்தில் பதாகைகளை ஏந் தியும், அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி யும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். இந்த போராட் டத்தில் சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவர்சல வாதி நாராயணசாமி, சட் டப்பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவர் அர விந்த் பெல்லாட், பெங்க ளூரு மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி.சி. மோகன் மற்றும் பல கட்சி சட்டமன்ற உறுப்பி னர்கள், தலைவர்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின்போது, கட்சித் தொண்டர்கள் சிலர்முதல்வர்சிவக்குமார் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பைரதி சுரேஷ் ஆகியோரின் முக மூடிகளை அணிந்து கொண்டுகைகளில்பிச்சை ஏந்தும் பாத்திரங்களுடன் நின்றிருந்தனர். அசோக் மற்றும் பிற தலைவர்கள் பேருந்து கட்டண உயர் வால் பாதிக்கப்பட்ட பய ணிகளுக்கு ரோஜா பூக் களை வழங்கி தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்த னர். போக்கு வரத்துத் துறைக்கு அரசாங்கம் சுமார் ரூ. 5000 முதல் ரூ. 6000 கோடி வரை நிதி வழங்க வேண்டும்.

அந்தப் பணத்தை வழங்க முடியாததால், அந்த சுமையை மக்கள் மீது சுமத்துகி றார்கள். தங்களின் தேர்தல் வாக்குறுதி திட்ட ங்களுக்கு நிதியளிக்க முடியாததால், அவர்கள் மக்களைச் சுரண்டுகிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் குற்றம் சாட்டினார்.

### சபரிமலையில்

# மண்டல பூஜை காலத்தில் வாட்ஸ்அப் உதவி மையம்

## கேரள அரசு அறிமுகம்

பத்தனம்திட்டா, நவ.7 சபரிமலைக்கு வரும் மண்டல, மகரவிளக்கு சீசனை முன்னிட்டு ஆயி ரக்கணக்கான பக்தர்களின் வசதிக்காக புதிய இணை யதளம் மற்றும் வாட்ஸ் அப் உதவி மையத்தை கேரள அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. கேரள அர சின் வருவாய்த்துறை அமைச்சர் ஏ.பி.அனில்கு மார் இந்த புதிய டிஜிட்டல் சேவை யை நேற்று தொடங்கி வைத்தார்.

பத்தனம் திட்டா மாவட்ட நிர்வாகத்தால் உரு வாக்கப் பட்டுள்ள இந்த இணையதளத்தை தனிச் செயலி ஏதுமின் றியே பக்தர்கள் எளிதாகப் பயன்படுத்தலாம். கூட்ட நெரிசலில் காணாமல் போகும் நபர்கள் மற்றும் செல்போன் உள்ளிட்ட தொலைந்த பொருள்கள் குறித்து பக்தர்கள் ஆன் லைனில் புகைப்படம் பதிவு செய்து புகாரளிக்க முடியும். இந்தப் புகார்கள் தானாகவே காவல் கட்டுப் பாட்டு அறைக்குச் சென்று விடும். எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் குறித்த தகவல்கள் வாட்ஸ்அப் மூலம் உடனுக்குடன் புகார் அளித்தவருக்குத் தெரிவிக்கப்படும். 112, 1077, 108, 100 மற்றும் 101 ஆகிய அவசர உதவி எண்களும்இதில்இணைக் கப்பட்டுள்ளன.

பம்பை, நிலக்கல், சன் னிதானம் ஆகிய இடங்க ளில் உள்ள தரிசன விவரங் கள், தங்கும் வசதி, போக்குவரத்து, மருத்துவ உதவி மற்றும் அவசர உதவி போன்ற அத்தியாவ சிய சேவைகள் குறித்த தக வல்களையும் இதன் மூலம் பெறலாம். தரிசனத் திற்காக காத்திருக்கும் நேரம், குடிநீர், கழிப் பறை, வாகன நிறுத்து மிடம் மற்றும் ஏடிஎம் மையங்கள் எங்கு உள்ளன என்பதையும் கூகுள் வரை பட வசதியுடன் அறிந்து கொள்ளலாம். அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்து சேவைகள் மற்றும் செங்கன்னூர், திரு வல்லா, கோட்டயம் ஆகிய ரயில் நிலையங்க ளின் கால அட்டவணைக ளும் இதில் வழங்கப்பட் டுள்ளன. பக்தர்களிடம் அதிக கட்டணம் வசூலிப் பதைத் தடுக்க, கடைக ளில் உள்ள பொருள்களின் விலை விவரங்களும் இதில் பல மொழிகளில் இடம் பெற்றுள்ளன. அதிக கட்டணம் வசூலித் தால் பில் விவரங்களுடன் புகாரளிக்கலாம். இந்தத் தளம் 15 பிரிவுகளில் வேலை செய்யும் சுமார் 400 தூய்மைப் பணியாளர் களின் வருகை மற்றும் செயல்பாடுகளைக் கண் காணிக்கவும் அதிகாரி களுக்கு உதவும். அமைச்சர் அனில்குமார் தலைமை யில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், பம்பை நதி யில் துணிகளை வீசுவ தைத்தடுக்கவிழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என் றும், நிலக்கல்லில் கூடுத லாக 2 மின்சார வாகன மின்னேற்று நிலைய ங்களை அமைக்க வேண் டும் என்றும் வலியுறுத்தப் பட்டது. மண்டல பூஜைக் காக சபரிமலை நடை வரும் நவம்பர் 17–ஆம் தேதி திறக்கப்பட உள்ள நிலையில், பக்தர்களின் பாதுகாப்பானபயணத்தை உறுதி செய்ய அனைத்துத் துறைகளும் ஒருங்கி ணைந்து செயல்பட வேண்டும் என்று அமைச் சர் அறிவுறுத்தினார்.

### பைக் விபத்தைப் பார்க்க கூடியிருந்த

# மக்கள் மீது லாரி மோதி 7 பேர் பலி

## ஜார்கண்டில் சோகம்



ராஞ்சி, நவ.7– ஜார்கண்ட் மாநிலம் குந்தி மாவட்டத்தில் உள்ள கர்ரா காவல் எல் லைக்கு உட்பட்ட பகுதி யில் நேற்று வழக்கமான போக்குவரத்து நடைபெற் றுக் கொண் டிருந் தது. அப்போது அந்தச் சாலை யில் சென்று கொண்டி ருந்த ஸ்கூட்டி ஒன்று எதிர் பாராதவிதமாக விபத்தில் சிக்கியது. இந்த விபத்து குறித்து அறிந்து, அப்பகுதி யைச் சேர்ந்த பொதுமக்க ளும் வழிப்போக்கர்களும் என்ன நடந்தது என்பதைப் பார்ப்பதற்காகச் சாலை ஓரத்தில் திரண்டு கூடியுள் ளனர். அப்போது, அதே சாலையில் கட்டுப் பாட்டை இழந்து மிக அதி வேகமாக வந்த சரக்கு லாரி ஒன்று, எதிர்பாராதவி தமாகச் சாலையில் கூடியி ருந்த மக்கள் கூட்டத்தின் மீது பயங்கரமாக மோதி யது. லாரி மோதிய வேகத் தில் அங்கிருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டனர். இந்த கோர விபத்தில் சிக்கி பகோ தேவி, கசிலா தேவி, மஞ்சு தேவி, கோலு குமார், அஞ்சலி குமாரி, துதி குமாரி மற்றும் 12 வயது சிறுவன் சௌரவ் நாயக் ஆகியோர் சம்பவ இடத்திலேயே 7 பேர் ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்

குஷ்பு குமாரி என்ற பெண் படுகாயங்களுடன் குந்தி சதார் மருத்துவம னையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இவர் கள் அனைவரும் ஜோனே லுத்ரு வளைவு அருகே உள்ள குடியிருப்புப் பகுதி யைச் சேர்ந்தவர்கள்.

.விபத்து குறித்துத் தகவ லறிந்து சம்பவஇடத்திற்கு விரைந்து வந்த கர்ரா பகுதி காவல்துறையினர், உயிரி ழந்த 7 பேரின் உடல்களை யும் மீட்டுப் பிரேதப் பரி சோதனைக்காக அருகில் உள்ள அரசு மருத்துவம னைக்கு அனுப்பி வைத்த னர்.

மேலும், விபத்தை ஏற்ப டுத்திய லாரியின் ஓட்டுநர் மதுபோதையில் இருந்த தாக உள்ளூர் மக்கள் குற் றம் சாட்டியுள்ளனர். விபத்து நடந்தவுடன் லாரி ஓட்டுநரும் அவரது உதவி யாளரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். காவல்துறையினர் வழக் குப் பதிவு செய்து தலைம றைவானவர்களைத் தேடி வருகின்றனர்.

### குற்றவாளிகளின் விவர அறிக்கை சமர்ப்பிக்க

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சி.பி.ஐ. அவகாசம் கோரியது

புதுடெல்லி, நவ.7 ஆம்ஸ்ட்ராங் கொலை குற்றவாளிகளின் ஜாமீன் தொடர்பான வழக்கு, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே. வி. விஸ்வநாதன், அருண்பள்ளி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசார ணைக்கு வந்தது. அப் போது சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறி ஞர் டி.பி.சிங், "ஆம்ஸ்ட் ராங் கொலையில் நேரடி யாக ஈடுபட்டதாகக் கூறப்படும் அருள், பொன்னை பாலு, ராமு, திருவேங்கடம், திரு மலை, மணிவண்ணன், சிவா, விஜய், கோகுல், சந்தோஷ் ஆகிய 10 பேர் தொடர்பான முழு விவரங் களையும் அறிக்கையாக தாக்கல் செய்ய கால அவ காசம் வேண்டும்" என்று கோரினார். அப்போது, குற்றம் சாட்டப்பட்டவர் கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சித் தார்த் தவே, "சி.பி.ஐ. சுட் டிக்காட்டிய 10 பேருக்கும் தனியாக ஜாமின் வழங்கப் பட்டது. எனவே அந்த நபர்களின் விவகாரத்தை இந்த வழக்குகளோடு இணைக்க கூடாது. இந்த மனுக்களைத் தனியாக விசாரித்து உத்தரவு பிறப் பிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். ஆனால், சி.பி.ஐ. கோரிய கால அவ காசத்தை வழங்கி, வழக்கு மீதான விசாரணையை நவம்பர் 25ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். முன்ன தாக கடந்த 3ஆம் தேதி வழக்கு விசாரணை க்கு வந்த போது முக்கிய குற்ற வாளிகள் 10 பேருக்கு எதி ராகப் பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், இந்த நபர்களுக்கு வழங்கப் பட்ட ஜாமினை ரத்து செய்து, அவர்களிடம் முழுமையான விசாரணை நடத்துவதற்கும், உரிய நட வடிக்கை எடுப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என சி.பி.ஐ. தரப்பில் கோரப்ப ட்டது. அதை ஏற்ற உச்ச நீதிமன்றம், விரிவான அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா, பாகிஸ்தானிடம் இருந்து சிஜேபிக்கு நிதி

# ஆதாரம் இருப்பதாக மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் குற்றச்சாட்டு

பெங்களூரு, நவ.7 கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) தலைவர் கள், அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானிடம் இருந்து நிதியுதவி பெற்று உள்ளனர். இதற்கு வலுவான ஆதா ரங்கள் உள்ளன என்று மத் திய அமைச்சர் ஜிதேந்திர சிங் குற்றம் சாட்டி உள் ளார். நீட் வினாத் தாள் கசிவை கண்டித்து டெல் லியில் சிஜேபி சார்பில் போராட்டம் நடத்தப்பட் டதன் விளைவாக, மத்திய கல்வி அமைச்சராக இருந தர்மேந்திர பிரதான் ராஜி னாமா செய்தார். இதைத் தொடர்ந்து எஸ்ஐஆர் விவ காரத்தில் தலைமைத் தேர் தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி சிஜேபி சார்பில் கடந்த அக் டோபர் 10&ம் தேதி முதல் டெல் லியில் தொடர் போராட்டங்கள் நடத்தப் பட்டன.

இதுதொடர்பாக சிஜேபி நிறுவனர் அபிஜித் திப்கே, செய்தித் தொடர்பாளர் சவு ரவ் தாஸ், ஒருங்கிணைப் பாளர் அசுதோஷ் ரங்கா மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள் ளன. சிறை யில் அடைக் கப் பட்ட மூன்று பேரும் நிபந்தனை ஜாமீனில் விடு விக் கப் பட்டு உள் ளனர். ஓராண்டுக்கு சட்ட விரோத நட வடிக்கை களில் ஈடு பட மாட் டோம் என்று மூவரும் உறுதிமொழி பத் திரத்தில்கையெழுத்திட்டு உள்ளனர்.

இந்த சூழலில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பெங் களூருவில் நேற்று நி ருபர் களிடம் கூறியதா வது: இந் தியாவுக்கு எதி ராக செயல் படும் தன் னார்வ தொண்டு நிறு வனங்கள் சிஜேபி தலைவ ர்க ளுக்கு நிதியுதவி செய் துள்ளன. இதற்கான வலு வான ஆதாரங்கள் கிடைத் துள்ளன.

'அமெரிக்காவைச் சேர்ந் த அமைப்புகளிடம் இருந த்து சிஜேபி தலைவர் அபி ஜித் திப்கே நிதியுதவி களை பெற்று உள்ளார்.

அதன் ஒருங் கிணைப் பாளர் அசுதோஷ் ரங்கா பாகிஸ் தான் அ ரசியல் தலை வர்களிடம் இருந்து பணம்பெற்றுஉள்ளார். இவ வாறு அவர் குற்றம் சாட்டி உள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக அபிஜித் திப் கே, சவுரவ் தாஸ், அசுதோ ஷ் ரங்கா ஆகியோரிடம் தீவிர விசாரணை நடத்தப் படும் என்று டெல்லி குற் ற ப் பிரிவு போலீஸ் வட் டா ர ங் கள் தெரி வித் துள்ளன.

# 'மக்கள் பாதுகாப்பை பணயமாக வைப்பதா?' தியேட்டர்களில் அதிகாலை காட்சிக்கு திமுக கண்டனம்



சென்னை, நவ.7 புதிய திரைப்படங்களுக்கு தின மும் 6 காட்சிகள் மற்றும் காலை 6 மணி முதல் திரை யிட அனுமதி அளித்துள்ள தவெக அரசின் உத்தரவு, இளைஞர் சமுதாயத்தையு ம் தமிழக கலாச்சாரத்தையு ம் சீரழிக்கும் செயலாகும் என்று திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கண்டனம் தெரிவித்துள்ளார்; மேலு ம், இது கூட்ட நெரிசலால் உயிரிழப்புகளை ஏற்படுத் தலாம் என்றும் அவர் எச்ச ரித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "புதிய படம் வெளியாகும் நாளில் இருந்து ஒரு வாரத்துக்கு தினமும் காலை 6 மணி முதல் மறுநாள் அதிகாலை 2.30 மணி வரை 6 காட்சி களை திரையிடலாம் என் றும், சனி & ஞாயிறு, உள் ளூர் பண்டிகை, பொது விடுமுறை நாள்களிலும் 6 காட்சிகளைத் திரையிட அனுமதி வழங்கியிருக்கி றது தவெக அரசு. இளைஞ ர் சமுதாயத்தையும், தமி ழக கலாச்சாரத்தையும் சீரழிக்கும் நோக்கில் பொழுது விடிந்தவுடன் புதிய திரைப்படங்களை தியேட்டர்களில் திரையி டலாம் என்று தவெக அரசு பிறப்பித்துள்ள உத்தரவு பேரதிர்ச்சியளிக்கிறது.

நான் முதல்வன், புதுப்புது நூலகங்கள், தமி ழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் என்றெல லாம் மாணவர்களின் அறி வுசார் தமிழகத்தின் பக்க மாக அழைத்துச் செல்ல திராவிட மாடல் ஆட்சியில் வியத்தக திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. ஆனால், தவெக ஆட்சி யிலோ "பொழுது விடிந்த தும் சினிமா" "காலை 6 மணி முதல் ஒரு நாளைக்கு 6 காட்சிகள்" திரையிடலாம்" என உத்த ரவு அளித்து, ஒரு தலை முறை அழிப்பைச் செய்ய த் தொடங்கி விட்டது.

இதே முதல்வர் விஜய்யி ன் லியோ பட ரீலீஸின் போதுதான் ஒரு திரையரங்கில் காலை 6 மணிக் காட்சியில் ஏற்பட ட நெரிசல், கண்ணாடிகள் உடைப்பு, கலாட்டா என மக்கள் பதற்றத்தில் மூழ்கி னார்கள். அப்படியொரு ஆபத்தை தவிர்த்திடவே திராவிட மாடல் ஆட்சியி ல் காலை 6 மணி காட்சிக ளுக்கு மட்டுமல்ல, ஒரு நாளைக்கு 6 காட்சிகளுக ளுக்குதடைவிதிக்கப்பட்டது.

அன்றைக்கு "7 மணிகாட சிக்கு அனுமதி கேட்டு" லியோ படத் தரப்பினர் உ ய ர் நீ தி மன் ற த் தி ற் கு சென்ற போது கூட பொது மக்கள் பாதுகாப்புமுக்கிய ம் என்பதையே உயர்நீதிம ன்றம் வலியுறுத்தியது.

ஆகவேதான் 6 மணி அல் லது 7 மணிக் காட்சியோ, ஒரு நாளைக்கு 6 காட்சி களோ அனுமதிக்க முடி யாது என்பதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருந்தது. ஆனால் ஆட்சிக கு வந்த முதல்வர் விஜய் "6 மணிகாட்சிமற்றும் ஒரு நாளைக்கு 6 காட்சிகள்" என புதிய திரைப்படங்களுக்கு உத்த ரவிட்டுள்ளது மிகக் கொடு மையான கலாச்சாரத் தாக் குதல் மட்டுமல்ல, நீதிமன்ற உத்தரவுக்கு எதி ரான செயலும் கூட.

அடுத்தடுத்துக் காட்சிக ள் திரையிடப்படுவதால், மறுகாட்சிதொடங்குவதற கு இடைப்பட்ட நேரம் மிகக் குறைவாக இருக்கு ம். அதனால், தியேட்டரை விட்டு வெளியே வருகிற வர்களும் உள்ளே நுழைப வர்களும் முட்டி மோதி அதனால் நெரிசல் ஏற்பட ்டு, உயிரிழப்புகள் ஏற்பட லாம். ஹைதராபாத்தில் ஒரு திரைப்படத்தின் சிறப் புக் காட்சியின் போது கூட்ட நெரிசலில் ஒரு பெண் உயிரிழந்த சம்பவ ம் இந்தியா முழுவதும் அறியப்பட்ட நிகழ்வு.

2023 &ல் ஒரு திரைப்பட ரிலீஸின் போது சென்னை திரையரங்கம் அருகே, நள் ளிரவு 1 மணி சிறப்பு காட் சியைக் கொண்டாட வந்த ரசிகர் லாரியின் மீது ஏறி நடனமாடி கீழே விழுந்து உயிரிழந்தார். இப்படி ஏதும்நடந்துவிடக்கூடாது என்பதுதான் திராவிட மாடல் அரசின் நோக்க மாக இருந்தது. ஆனால் இப்போது விஜய் அரசு 6 காட்சிகள் அனுமதித்தித்து அதுபோன்றதுயரசம்பவங ்கள் நடக்க வேண்டும் என ஆசைப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

தமிழகத்தின் பெருமை களை, பண்பாட்டை சீரழி க்கும் இப்படியொரு முன் னெடுப்பை& அதுவும் பொதுமக்களின் பாதுகாப ்பை பணயமாக வைத்து விஜய் அரசு எடுத்திருப் பது கடும் கண்டனத்திற்கு ரியது. புதுப்படம் வெளி யாகும் போது மற்ற மாநிலங்களில் காலை ஆறு மணிக்கு காட்சிகள் திரையிடுவதால் தமிழகத் தில் முன்கூட்டியே திரை விமர்சனம் வெளியாகி, படத்தின் வெற்றி வாய்ப ்பை பாதிக்கிறது என்கிற நோக்கத்தில் தமிழக நடப ்பு சினிமா தயாரிப்பாளர் சங்கம் சொல்லியிருக்கி றது. மனித உயிர்களை விட எந்த வகையிலும் திரைப்படத்தின் வெற்றி உயர்ந்ததில்லை. ஹைதரா பாத் துயர நிகழ்வுக்கு பிறகு மற்ற மாநிலங்களில் கடுமையானகட்டுப்பாடுக ள் விதித்து வருகிறார்க ள். திரைப்படத்தின் வெற் றியை விட அடுத்த தலைமுறை வாழ்க்கையி ன் வெற்றிதான் முக்கியம் என்பதை இந்த அரசு உணர வேண்டும்" இவ் வாறு அவர் தெரிவித்துள் ளார்.

### ட்ரம்ப் தேர்தல் வீழ்ச்சி

# இந்தியாவுக்கு சாதகங்களும், சவால்களும் என்னென்ன?

## ஒரு பார்வை



புதுடெல்லி, நவ.7

அமெரிக்க அதிssssபர் டொனால்டுட்ரம்ப்பின்தன்னிச்சையான வர்த்தக முடிவுகளாலும், அச்சுறுத்தும்வரிமிரட்டல்களாலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக நாடுகள் கொந்தளிப்பான பொருளாதாரச் சூழலை எதிர்கொண்டன. அதற்கு தற்போது ஓர் ஆசுவாசம் கிடைத்திருப்பதுபோல், அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகளால் உலக நாடுகள் சற்று பெருமூச்சு விட்டுக்கொள்கின்றன.

அதிபர் ட்ரம்ப்பின் தீவிரமான பொருளாதாரக் கொள்கைகளுக்கு அமெரிக்க மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் பலத்த முட்டுக்கட்டைபோட்டுள்ளனர். அந்நாட்டு நாடாளுமன்றத்தின் அவைகளான பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் இரண்டையும் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி கைப்பற்றியுள்ளது.

குடியரசுக் கட்சியின் இந்த வரலாற்று பின்னடைவு, வெறும் அமெரிக்க உள்நாட்டு அரசியல் மாற்றமாக மட்டும் பார்க்கப்படாமல், அது உலகளாவிய வர்த்தகச் சூழலின் போக்கை மாற்றி அமைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, இந்தியா மீதான 18சதவீத வரிவிதிப்பு அச்சுறுத்தல்களையும், ஹெச்&1பி விசா மீதான ஒரு லட்சம் டாலர் கட்டண உத்தரவையும் தன்னிச்சையாக நிறைவேற்ற முடியாதவாறு ட்ரம்ப்பின் கரங்கள் கட்டப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் ஈரானுடனான மோதல் மற்றும் அதன் காரணமாக உச்சத்துக்குச் சென்ற கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவைதற்போது அமெரிக்க நாடாளுமன்றத்தின் நேரடிப் பார்வைக்கு வந்துள்ளன.

தற்போது குறைந்து வரும் கச்சா எண்ணெய் விலை இன்னும் குறையும் பட்சத்தில், அது இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி சுமையைக் குறைப்பதோடு சர்வதேசச் சந்தையில் எரிபொருள் விலையைச் சமன் செய்யவும் பெரிதும் உதவும். அதேவேளையில், சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்காவின் ஏகபோக அழுத்தங்களும் தணிந்துள்ளன.

ட்ரம்ப்பின் அதிரடி நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றத்தில் முட்டுக்கட்டை விழுந்துள்ள நிலையில், ஜனநாயகக் கட்சியின் இந்த எழுச்சி இந்தியாவுக்கு முற்றிலும் சாதகமானது என்றும் கூறிவிட முடியாது. அதேநேரத்தில், இது இந்தியாவுக்குப் பல வழிகளில் சாதகமான சூழலையும், சில வழிகளில் புதிய சவால்களையும் ஒரே நேரத்தில் உருவாக்கியுள்ளது.

இந்தோ & பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை ஒடுக்குவதில் குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சிகளுக்கு இடையில் மாற்று சிந்தினை இல்லை. இது இந்தியாவுக்குத் தேவையான 'இரு கட்சிகளின்' (Bipartisan) ஸ்திரமான பாதுகாப்பு ஆதரவுதடையின்றிகிடைக்கும்.

இந்தியாவுக்கு தொடரும் அழுத்தம்:

அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகள் அதிபர் ட்ரம்ப்புக்கு பேரிடியாக இறங்கியுள்ளன. இரு அவைகளையும் ஜனநாயகக் கட்சியினர் கைப்பற்றியுள்ளதால், ட்ரம்ப்பின் அதிகாரங்களுக்குகைப்பூட்டு போடப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் இந்த வெற்றி, இந்தியா & அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை வேகப்படுத்தும். அதேசமயம், ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை இந்தியா மீதான சுங்க வரிகள் அதிகரிக்கப்படவும்வாய்ப்புள்ளது.

உள்நாட்டில் சரிந்துள்ள தனது பலத்தை நிரூபிப்பதற்காக வர்த்தக ஒப்பந்தத்தை விரைவாக முடிக்க இந்தியா மீதான சுங்க வரி அழுத்தத்தை அதிபர்ட்ரம்ப் அதிகரிக்கக் கூடும்.

வர்த்தக ஆராய்ச்சி அமைப்பான 'குளோபல் டிரேட் ரிசர்ச் இனிஷியேட்டிவ்' (GTRI)&ன் நிறுவனர் அஜய் ஸ்ரீவஸ்தவா 'தி இந்து' ஆங்கிலம் நாளிதழிடம் கூறுகையில், "தேர்தல் தோல்வியால் அதிர்ச்சியடைந்துள்ள அமெரிக்க அதிபர்ட்ரம்ப், வர்த்தகஒப்பந்தத்தை ஏற்குமாறு இந்தியாவை வற்புறுத்தத்தனது அதிகாரத்தைப்பயன்படுத்தக்கூடும். ரஷ்யா, சீனா மற்றும் ஈரானுக்கு எதிரான அமெரிக்க வெளியுறவுக் கொள்கை பலன் அளிக்காததால், தனது செல்வாக்கை வெளிப்படுத்த உடனடியாக ஒரு வெற்றி தேவை என்பதால், இந்தியா மீது ட்ரம்ப் நிர்பந்தம் செலுத்தலாம்" என்றார்.

இந்தியா & அமெரிக்க ஒப்பந்த நிலை:

2025&ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல்கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின. ஆனால், இந்தியப் பொருட்கள்மீது 25சதவீதம்பரஸ்பர வரியையும், ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கியதற்காக மேலும் 25 சதவீத வரியையும் அதிபர்ட்ரம்ப்விதித்ததால்அந்தப்பேச்சுவார்த்தைமுடங்கியது.

பின்னர் 2026 பிப்ரவரியில் வரிகளை 18 சதவீதமாக குறைக்கட்ரம்ப் உறுதியளித்தாலும், சர்வதேச அவசரக்கால பொருளாதாரஅதிகாரச்சட்டத்தின் (IEEPA) கீழ் ட்ரம்ப் விதித்த வரிகளைச்செல்லாது என அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் ஜூலைக்குப்பின் இந்தியாவின் மீது 10 சதவீத வரியைட்ரம்ப்விதித்தார்.

இந்தியாவுக்குக் கிடைக்கும் சாதகங்கள்:

வரிவிதிப்புகட்டுப்பாட்டுக்குள் வரும்:

அதிபர் ட்ரம்ப் இனிமேல் தன்னிச்சையாக புதிய வரிகளை விதிப்பது எளிதாக நடக்கப் போவதில்லை. ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்தைக்கைப்பற்றி உள்ளதால், ட்ரம்ப்பின் முடிவுகள் தடுத்து நிறுத்தப்படும். இதனால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையற்ற வரி உயர்வு பயம் குறையும்.

ஹெச்&1பி (H&1B) விசா மற்றும் ஐடி துறைக்கு நிம்மதி:

புதிய ஹெச்&1பி (H&1B)விசாக்களுக்குட்ரம்ப் கொண்டு வந்த ஒரு லட்சம் டாலர் கட்டணம் போன்ற கடுமையான விதிகளை ஜனநாயகக் கட்சியினர் எதிர்ப்பார்கள். அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குத் திறமையான இந்திய ஐ.டி. ஊழியர்கள் தேவைப்படுவதால், விசாகெடுபிடிகள் தணியும்.

கச்சா எண்ணெய் விலையில் மாற்றம்:

ட்ரம்ப்பின் அதிரடி வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் ஈரான் மீதான போர்ச் சூழல் அமெரிக்காவில் கடும் பணவீக்கத்தை உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்தது. தேர்தல் தோல்வியால் அதிபர் ட்ரம்ப் இனி தன்னிச்சையாகப் போரை வளர்க்க முடியாது. அதற்கு நிதி ஒதுக்குவதும் கடினமாகும். இதனால் ஈரானுடன் போர் முடிவுக்கு வரவும் வாய்ப்புள்ளது எனப் புவிஅரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா & ஈரான் இடையே போர் தீவிரமடைவதற்கான ஆபத்து குறைந்துள்ளதால், கச்சா எண்ணெய் (Brent Crude) விலை பீப்பாய்க்கு 105 டாலராகச் சரிந்துள்ளது. கச்சா எண்ணெய் விலை கட்டுக்குள் வருவது இந்தியாவின் இறக்குமதிச் சுமையைக் குறைத்து, பெட்ரோல், டீசல் விலை ஏற்றத்தைக்கட்டுப்படுத்தவும் இந்திய ரூபாயின் மதிப்பைப் பேணவும் பெரிதும் உதவும்.

ரஷ்யாவுடனான வர்த்தகம் சீராகும்:

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 100 சதவீதம் அபராதம் விதிக்கப்படும் என்ற ட்ரம்ப்பின் மிரட்டலுக்கு நாடாளுமன்றத்தில்எதிர்ப்புகிளம்பும். இதனால்ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்குவது இந்தியாவுக்கு எளிதாகும்.

பாதுகாப்பு ஒப்பந்தங்கள் தொடரும்:

இந்தோ & பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை முடக்குவது அமெரிக்காவின் இரு கட்சிகளுக்கும் பொதுவான கொள்கையாகும். எனவே 10 ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும்ராணுவத்தொழில்நுட்பப் பகிர்வு தடையுமின்றித் தொடரும்.

கவனம் பெறும் சந்திப்பு:

வரும் டிசம்பர் மாதம் புளோரிடாவில் நடைபெறும்ஜி20(G20)உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பார்என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது நடைபெறவுள்ளபிரதமர்மோடி & ட்ரம்ப் சந்திப்பு, இருநாடுகளுக்கும்இடையிலான முதற்கட்ட வர்த்தகஒப்பந்தத்தில் கையெழுத்திடும் சூழலை உருவாக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# லாஸ் ஏஞ்சல்ஸ் மேயராக இந்திய வம்சாவளியை சேர்ந்த நித்யா ராமன் தேர்வு




லாஸ் ஏஞ்சல்ஸ், நவ.7

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த தமிழ் குடும்ப பின்னணி கொண்ட நித்யா ராமன் வெற்றி பெற்றுள்ளார். இதன்மூலம் லாஸ் ஏஞ்சல்ஸின் அடுத்த மேயராக உள்ளார்.

தற்போதைய லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் கரேன் பாஸுக்கு எதிராக நித்யா ராமன் போட்டியிட்டார். இதில் 52 சதவீத வாக்குகளை பெற்று நித்யா ராமன் வெற்றி பெற்றார். இதன்மூலம் லாஸ் ஏஞ்சல்ஸின் முதல் இந்திய & அமெரிக்கர் மற்றும் தெற்காசிய மேயர் என்ற அடையாளத்தை அவர் பெற்றுள்ளார். அமெரிக்காவின் மிகப் பெரிய நகரங்களின் பட்டியலில் ஒன்றாக லாஸ் ஏஞ்சல்ஸ் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஜனநாயக கட்சியை சேர்ந்த கரேன் பாஸுக்கு அரசியல் ரீதியான ஆதரவு அமோகமாக இருந்தது. முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸ் உட்பட பலர் தங்களது ஆதரவை அவருக்கு தெரிவித்திருந்தனர். இடதுசாரி அமைப்பான அமெரிக்கஜனநாயகசோசயலிஸ்ட் அமைப்பின் ஆதரவு நித்யா ராமனுக்கு இருந்தது. இந்நிலையில், கடும் போட்டிக்கு மத்தியில் நித்யா வெற்றி பெற்றுள்ளார்.

மாற்றம் நிகழ காலம் எடுக்கும்

"லாஸ் ஏஞ்சல்ஸின் அடுத்த மேயராகப் பொறுப்பேற்பதில் மிகுந்த பெருமை கொள்கிறேன். தற்போதைய மேயர் கரேன் பாஸை தொடர்பு கொண்டு எனது நன்றியை தெரிவித்தேன். இந்தநகரத்தை நான் நேசிக்கிறேன். மக்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. இனி நான் செய்ய வேண்டிய பணிகள் கடினமானவை. மாற்றம் நிகழ காலம் எடுக்கும். அதற்கு அவகாசம் தேவைப்படும். நாம் அனைவரும் இணைந்து இந்த நகரத்துக்கு ஏற்ற வகையிலான சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க உள்ளோம். நன்றி" என்று நித்யா ராமன் தெரிவித்துள்ளார்.

யார் இவர்?

கேரளாவைச் சேர்ந்த தமிழ்குடும்பத்தில் 1981&ல் பிறந்தவர்தான் நித்யா ராமன். இவருக்கு 6 வயது இருக்கும்போது, பெற்றோர் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் அரசியல் கோட்பாடும், மசாசூட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நகரத் திட்டமிடலும் பயின்றார்.

இவர் ஒரு காலத்தில் சென்னைக்குத் திரும்பி, தூய்மை மற்றும் சுகாதார மேம்பாட்டுக்காக ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கினார்.

கடந்த 2013&ல் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் குடியேறிய இவர், வீடு இல்லாதவர்களுக்காக செலா (SELAH) என்ற அமைப்பைத் தொடங்கினார். மேலும், 'மீ டூ' இயக்கத்துடன் தொடர்புடைய 'டைம்ஸ் அப்என்டர்டெய்ன்மென்ட்''அமைப்பிலும் பணியாற்றினார். கடந்த 2020&ல் ஹிலாரி கிளிண்டன் போன்ற ஜாம் பவான்களின் ஆதரவு பெற்ற ஒருவரைத் தோற்கடித்து, லாஸ் ஏஞ்சல்ஸ் நகர சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தெற்காசியப் பெண் என்ற சாதனையைப் படைத்தார் நித்யா ராமன். இந்நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸ் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜோரான் மம்தானி கடந்த ஆண்டு நடந்த நியூயார்க் மேயர் தேர்தலில் வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்தார்.

இந்நிலையில், நித்யா ராமன் லாஸ் ஏஞ்சல்ஸ் மேயராக தேர்வாகி உள்ளார்.

# ஜசன்கோட்டுக்கு 67 பேர் ஆதரவு

## இஸ்ரேலில் ஆட்சி மாற்றம்?

ஜெருசலேம், நவ.7

இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த அக்.27&ம் தேதி நடைபெற்றது. இதில்பிரதமர்பெஞ்சமின் நெதன்யாகுவின் தீவிர வலதுசாரி கூட்டணிக்கு 53 இடங்களும், காடி ஜசன்கோட் மற்றும் நப்தாலி பென்னட் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு 48 இடங்களும், அரபுக் கட்சிக்கு 19 இடங்களும் கிடைத்தன. இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் மொத்தம் 120 இடங்கள் உள்ளன. ஆட்சி அமைக்க குறைந்தபட்சம் 61 இடங்கள் தேவை. தேர்தல் முடிவுகளை பொறுத்தவரையில் எந்தவொரு கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்நிலையில், ஆட்சி மாற்றம் வேண்டி காடி ஜசன்கோட்டுக்கு 67 பேர் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று இஸ்ரேலில் ஆட்சி அமைப்பதற்கான அழைப்பை அறிவிக்க உள்ளதாக அந்நாட்டு அதிபர்ஐசாக்ஹெர்ஸாக் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பிறகு அவர்இதனைக் கூறியுள்ளார். "ஆலோசனையில் நடந்தது அனைவருக்கும் தெரியும். இருப்பினும் யாருக்கு அரசாங்கம் அமைக்கும் திறன் உள்ளது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சட்டப்படி என்னிடம் உள்ளது. அரசியல் கூட்டணிகளுக்கு இடையில் நிலவும் விருப்பு வெறுப்புகளைப் பார்க்கும் போது இந்த விவகாரம் அவ்வளவு தெளிவாக இல்லை. சில அரசியல் கட்சித் தலைவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியே அதை தீர்மானிப்பேன்" என்று ஐசக் ஹெர்ஸாக் தெரிவித்துள்ளார்.

என்ன நடக்கும்?

எந்தக் கட்சியால் 61 சீட் சேர்க்க முடியும் என்று அதிபர் கருதுகிறாரோ அந்தக் கட்சி ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பார். பெரும்பாலும் அதிக சீட் வாங்கும் கட்சித் தலைவருக்கு தான் அந்த அழைப்பு விடுக்கப்படும்.

ஆனால், சில நேரங்களில் 2&வது இடம்பெறும் கட்சியைக்கூட அதிபர்ஆட்சியமைக்க அழைக்கலாம் என்று தகவல்.

அவ்வாறாக அழைக்கப்படுபவருக்கு 28 நாட்களும், தேவைப்பட்டால் அதன் பின்னர்

கூடுதலாக 14 நாட்களும் பெரும்பான்மையை நிரூபிக்க அவகாசம் வழங்குவார்.

ஒருவேளை அந்தக் கட்சியால் பெரும்பான்மையை நிரூபிக்க இயலாவிட்டால் மற்றொரு கட்சிக்கு அந்த

வாய்ப்பு வழங்கப்படும். அவரும் நிரூபிக்காவிட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட 61 எம்.பி.க்கள் ஒன்றிணைந்து பொதுவாக ஒருவரை கைகாட்டினால்

அவர்தலைமையில் அரசமைக்க அவகாசம் வழங்கப்படும். எதுவுமே ஒத்துவராத பட்சத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்படும்.

### 'அடுத்த ஒபாமா' என வர்ணிக்கப்படும் ஜான் ஓசாஃப்

# அமெரிக்க அதிபர் போட்டியில் கவனம் ஈர்க்கும் இளம் தலைவர்

வாஷிங்டன், நவ.7

அமெரிக்க இடைக்கால தேர்தல், ஜார்ஜியா மாகாணத்தில் ஜனநாயகக் கட்சி எம்பி ஜான் ஓசாஃப் (39) மீண்டும் வெற்றிபெற்று தனது செனட்டர் பதவியைத்தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் மீதான கடுமையான விமர்சனங்களாலும், முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவை நினைவூட்டும் ஆளுமையாலும் கவனம் ஈர்த்துள்ள அவர், 2028 அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான முக்கிய போட்டியாளராக உருவெடுத்துள்ளார். 2021&ல் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்ற போது, அவரை 'தற்செயலான செனட்டர்' என அரசியல் நிபுணர்கள் அழைத்தனர். ஆனால், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2024&ல் ட்ரம்ப் வென்ற மாநிலத்திலேயே தனது இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தில் ட்ரம்ப்பை கடுமையாக விமர்சித்து அவர் கவனம் ஈர்த்தார். அதிபரும் அவரது குடும்பமும் ஊழலில் ஈடுபடுவதாகவும், அவரது அரசு ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் குற்றம்சாட்டினார். ட்ரம்ப்பையும் அவரது ஆதரவாளர்களையும் 'எப்ஸ்டீன் வர்க்கம், மார்&எ& லாகோ (புளோரிடா

வில் உள்ள ட்ரம்ப்பின் சொகுசு விடுதி மற்றும் இல்லம்) மாஃபியா' என அவர்குறிப்பிட்டகாணொலிகள் வலைதளங்களில் வைரலாகின. வெற்றிக்குப் பிறகு அட்லாண்டாவில்பேசிய ஓசாஃப், ட்ரம்ப்பை தோல்வியடைந்த அதிபர் என விமர்சித்தார். ஊழலையும் திறமையின்மையையும் மக்கள் நிராகரித்துவிட்டதாகவும், ட்ரம்ப்பின் தீமையைக் கட்டுப்படுத்துவதோடு அதன் ஆழமான பாதிப்புகளைக் குணப்படுத்துவதே நமது பணி என்றும் அவர் கூறினார். சிறந்த பேச்சுத்திறன், மிதமான &முற்போக்குக் கொள்கை மற்றும் சட்டைக் கைகளை மடித்துவிட்டுப் பேசும் தோற்றம் ஆகியவற்றால் ஓசாஃப், பராக்ஒபாமாவுடன்(அடுத்த பராக்ஒபாமா) ஒப்பிடப்படுகிறார்.

மூத்த தலைவர்கள் நிறைந்த அமெரிக்க அரசியலில் ஓசாஃப் ஒரு இளமையான மாற்றாகப் பார்க்கப்படுவதாகப் பத்திரிகையாளர் எஸ்ராக்ளீன் குறிப்பிட்டுள்ளார். இடைக்காலத் தேர்தல் பிரச்சாரத்தில் ஓசாஃப் பைப் பாராட்டிய ஒபாமா, இருவருக்குமே வழிகாட்டியான ஜான் லூயிஸிடமிருந்து நல்ல மாற்றத்துக்காகக் குரல் கொடுக்கும் வழியை அவர் கற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

### வங்கி முடக்கம் எதிரொலி

# பராகுவே அதிபர் சான்டியாகோ பென்யா ராஜினாமா

அசுன்சியான், நவ.7

பராகுவே நாட்டின் டிஜிட்டல் வங்கியான யுயேனோ (Ueno) திடீரென முடங்கி பெரும் நிதி நெருக்கடி உருவானதைத் தொடர்ந்து, அந்நாட்டின் அதிபர் சான்டியாகோ பென்யா வியாழக்கிழமை தனது பதவியை ராஜினாமா செய்தார்.

சுமார் 65 லட்சம் மக்கள் தொகை கொண்ட பராகுவே நாட்டில், யுயேனோ வங்கியின் மூலம் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்குகளை அணுக முடியாமல் முடங்கியுள்ளனர். வங்கியின் குறைந்தபட்ச நிதிச் செலுத்துபடும் திறனில் ஏற்பட்டதை அடுத்து பராகுவே மத்திய வங்கி இதில் நேரடியாக தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குறுகியகாலத்தில் வளர்ந்து சுமார் 850 மில்லியன் டாலர் பொது நிதியைக் கையாண்டு வந்த இந்த வங்கி முடைந்த விவகாரத்தில், அதிபர்சான்டியாகோ பென்யா மீது ஓய்வூதிய நிதியைத் தவறாகப் பயன்படுத்தியது மற்றும் அதிகாரபூர்வத் தகவல்களை மறைத்தது போன்ற தீவிர குற்றச்சாட்டுகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமத்தினர்.



இதனைத் தொடர்ந்து, அதிபரைப் பதவி நீக்கம் செய்வதற்கானநாடாளுமன்ற அவசரக் கூட்டத்திற்கு எதிர்கட்சிகள் அழைப்பு விடுத்தன.

அதேவேளையில் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆளும்கட்சியினரின் ஆதரவையும் அவர் இழந்தார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய ஆதரவாளரான சான்டியாகோ பென்யா, நாட்டு மக்களுக்கு விடுத்த வீடியோ பதிவில் தெரிவித்ததாவது:

"நாட்டின் ஸ்திரத்தன்மை, சமூக அமைதி மற்றும் நமது ஜனநாயக அமைப்புகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளேன். வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகை திரும்பக் கிடைக்க வேண்டும்; டெபாசிட் உத்தரவாத நிதி தனது கடமையைச் செய்ய வேண்டும்; அனைத்துப் பராகுவே மக்களுக்குமான பொது நிதி பாதுகாப்பாகஇருக்கவேண்டும்என்பதேஎனதுமுதன்மை விருப்பம்"

இவ்வாறுசான்டியாகோ தெரிவித்தார். சான்டியாகோ பென்யாவின் ராஜினாமாவைத் தொடர்ந்து, பராகுவேயின் புதிய அதிபராகத் துணை அதிபர் பெட்ரோ அலியானா பொறுப்பேற்க வுள்ளார்.

# ஈரானுக்கு உதவிய இந்திய தம்பதிக்கு அமெரிக்கா தடை

வாஷிங்டன், நவ.7

: ஈரான் எண்ணெய் ஏற்றுமதிக்கு உதவி அளித்த குற்றச்சாட்டிற்காக இந்திய தம்பதிக்கு அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது. ஈரானிய அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் நபர்கள் மற்றும் அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இந்தநிலையில் அமெரிக்க நிதித்துறை



வெளியிட்டஅறிக்கையின்படி, இந்தியாவை சேர்ந்த சுனில்குமார்சர்மாமற்றும் அவரது மனைவி ஜஸ்ப்ரீத் பிரீத்தி ஷாஹித் ஆகியோரின் நிறுவனங்கள் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் போலியான இணையதளங்களை உருவாக்கி, பல்வேறு நாடுகளின் பெயரில் போலிகப்பல் பதிவுகள்மற்றும்சான்றிதழ்களை வழங்கி, ஈரானிய எண்ணெயைசுமந்து செல்லும் கப்பல்கள் சர்வதேச கட்டுப்பாடுகளிலிருந்து தப்பிக்க உதவியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்புடைய ஓஷானிக் டெக்னாலஜிஸ் இந்தியா, ஆர்யா வார்ட் ஷிப் மேனேஜ்மென்ட், பிரிசெப்ட் டிரெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பாலி னேஷியா மாரிடைம் பிரைவேட் லிமிடெட் உள்ளிட்ட 8 இந்திய நிறுவனங்களும் இந்த தடையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், ஈரானிய விமான நிறுவனங்களுக்குச் சேவைகளை வழங்கியதுருக்கியை சேர்ந்த 'புகோ கிரவுண்ட் சர்வீசஸ்' என்ற நிறுவனத்தின் மீதும் அமெரிக்கா தடை விதித்துள்ளது.

## சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 1,960 குறைந்து ரூ.1,05,120 க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.245 குறைந்து ஒரு கிராம் ரூ.13,140 கு விற்பனைண்ணயாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,960 குறைந்து ஒரு சவரன் ரூ.1,05,120 க்கு விற்பனையாகிண்றது. சென்னைண்யில் வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.5 குறைந்து ரூ.205 க்கு விற்பனை செய்யப்படுகிண்றண்டது.

## பெட்ரோல் விலை ரூ.107.77, டீசல் விலை ரூ.99.55 க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.107.77 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.99.55 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.95.00ண்ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

## நச்சுக்களை நீக்கும் குமுட்டிக் கீரை



குமுட்டிக்கீரையின் மருத்துவ குணங்கள்

உடலில் தேங்கியுள்ள நச்சுக்களை அகற்றி ரத்தத்தை சுத்தப்படுத்துகிறது.வைட்டமின் சி நிறைந்து இருப்பதினாலும் ஆன்டி ஆக்ஸிடன்டுகளை கொண்டுள்ளதினாலும் தோல் சார்ந்த நோய்களை குணப்படுத்த உதவுகிறது. நார்ச்சத்து நிறைந்துள்ளதால் செரிமானம் தொடர்பான அனைத்துப் பிரச்னைகளையும் தடுக்கிறது.

மூட்டுவலி, உடல் வீக்கம் போன்றவற்றுக்கு உதவுகிறது.

சளி, காய்ச்சல் போன்றவற்றை குணப்படுத்தக் கூடியது.

கல்லீரல் சம்பந்தமான பிரச்னைகளைத் தடுக்கக் கூடியது.

பெண்கள் நலம் காக்க உதவக்கூடிய கீரையாக தொன்று தொட்டே நம் முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக மாதவிடாய் சுழற்சியை சீர்படுத்தவும், உடல் வெப்பத்தை குறைக்கவும் உதவுகிறது.

மேலும் நவீன ஆய்வுகளின் வழி இக்கீரை புற்றுநோயைக் குணப்படுத்தவும், கல்லீரல், மூட்டுவலி தொடர்பான பிரச்னைகளை தடுக்கவும் பயன்படுவதாக கூறப்படுகிறது. ஆக மொத்தத்தில் பாரம்பரிய மருத்துவமும், நவீன அறிவியலும் வலியுறுத்தும் ஒரு சிறந்த கீரையாக குமுட்டிக் கீரை உள்ளது.

குமுட்டிக்கீரையின் காய்கள் மலச்சிக்கலையும் ஜீரண மண்டலத்தில் வரும் தொந்தரவுகளையும் போக்கக்கூடியது. இந்தக் கீரை சிறந்த மலமிளக்கியாகவும் உள்ளது. இதன் இலைகள் காய்ச்சலுக்கு சிறந்த மருந்தாக உள்ளது. உடலில் ஏற்படும் நோய் தொற்றுகள் மற்றும் வீக்கங்களுக்கு சிறந்த மருந்தாக உள்ளது.

இது நீர்ச்சத்து நிறைந்த கீரையாகும். உடலில் ஏற்படும் கெட்ட நீரை அகற்றக்கூடியது. ஆன்டி ஆக்சிடென்ட்கள் பண்புகளையும் இந்தக் கீரை கொண்டுள்ளது. சத்துக்கள் அதிகம் கொண்ட இந்த கீரை நோய் எதிர்ப்பு ஆற்றலை அபரிமிதமாக அளிக்கக் கூடியது. ரத்தத்தை தூய்மை ஆக்கக் கூடிய கீரை.

இந்தக் கீரையை அன்றாடம் உணவுடன் சேர்த்துக் கொள்ள நல்ல ஆரோக்கியத்தை பெற முடியும். உயிர்ச்சத்துகள் நிறைந்த அற்புதமான கீரை.பயன்படுத்தும் முறை: குமுட்டிக்கீரை சமைப்பதற்கு பயன்படுத்தும்போது, கீரையில் பூ வருவதற்கு முன்பு இளசாக இருக்கும்போதே பறித்து சமைப்பது நல்லது.

இக்கீரையை கூட்டு, பொரியல், கீரை அடை அல்லது தோசை என பல வகைகளில் தயாரித்து உணவில் சேர்த்துக் கொள்வது நலம். இக்கீரையை பாசிப்பருப்போடு சேர்த்து கடைந்து உண்ணும்போது சுவையாக இருக்கும்.

## தினை அரிசி கருப்பு உளுத்தம் பருப்பு சாதம்



தேவையான பொருட்கள்

1கப் தினை அரிசி
1/2 கப் உளுத்தம் பருப்பு
1/4 கப் தேங்காய்
5பல் பூண்டு
1/2 ஸ்பூன் வெந்தயம்
1/2 ஸ்பூன்சீரகம்
2ஸ்பூன் நல்லெண்ணெய்
உப்பு தேவைக்கு

செய்முறை:

தினை அரிசியை 4 வாட்டி கழுகி சுத்தம் செய்து 10நிமிடம் தண்ணீரில் ஊற விடவும்.ஒரு வாணலியை ஸ்டவ்வில் வைத்து உளுத்தம் பருப்பு, வெந்தயதை லேசா வறு த்துக்கவும். கருவிட கூடாது..குக்கரில் தினை அரிசி, உளுத்தம்பருப்பு, வெந்தயம், சீரகம், தேங்காய், பூண்டு,ண் தேவ யான உப்பு போட்டு 1: 2 என்ற விகிதத்தில் தண்ணீர் ஊற்றி 2 விசில் வரும்போது ஸ்டாவ்வ் ஆப் பண்ணிடவும். காரம் தேவை இல்லை. ஒரு கரண்டியை ஸ்டவ்வில் வெச்சு சூடானதும் நல்லெண்ணெய் ஊற்றி, கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயம் தாளித்து சாதத்தில் கொட்டவும். சுவையான ஆரோக்கியமான தினை உளுத்தம் சாதம் சுவைக்க தயார்..நல்லெண்ணெய் விட்டு பிசைந்து எள்ளு துவயல் தொட்டு சாப்பிட மிக ருசியாக இருக்கும்.

# ஆஸ்துமா அறிகுறிகள், சிகிச்சை முறைகள்



ஆஸ்துமா என்பது உலகளவில் அதிகம் காணப்படும் ஒரு நீண்டநாள் சுவாசக் கோளாறு ஆகும். மூச்சுக் குழாய்களில் ஏற்படும் நாள்பட்ட அழற்சி (chronic inflammation) காரணமாக, சுவாசம் உள்செல்வதிலும் வெளிவருவதிலும் தடை உண்டாகிறது. இது விசில் சத்தம் (wheeze), இருமல், மூச்சுத்திணறல், மார்பு இறுக்கம் போன்ற அறிகுறிகளால் வெளிப்படும்.

ஆஸ்துமா எந்த வயதிலும் ஏற்படலாம், ஆனால் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரிடையே இது அதிகமாகக் காணப்படுகிறது. சரியான சிகிச்சை, வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

காரணங்கள்

★ ஆஸ்துமா ஒரே காரணத்தால் அல்ல, பல காரணிகளின் கூட்டு விளைவால் உருவாகிறது:

★ மரபியல் (Genetic predisposition) - குடும்பத்தில் ஆஸ்துமா அல்லது ஒவ்வாமை (allergy) இருந்தால் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

★ சுற்றுச்சூழல் காரணிகள்

★ தூசி, புகை, காற்று மாசுபாடு

★ பூவின் தூள் (pollen), பூஞ்சை (fungi), செல்லப்பிராணிகளின் முடி (dander)

★ தொழில்சார் காரணிகள் - தொழிற்சாலைகளில் உள்ள இரசாயனங்கள், புகை, தூசி.

உடல்நிலை காரணிகள்

★ அலர்ஜிக் ரைனைடிஸ்

★ எக்ஸீமா (eczema)

★ உடல் பருமன் (obesity)

★ தூண்டுதல்கள் (Triggers)

★ குளிர் காற்று

★ உடற்பயிற்சி

★ மன அழுத்தம்

★ வைரஸ் தொற்றுகள்

நோய் உருவாகும் விதம் (Pathophysiology)

★ஆஸ்துமாவின்போது மூச்சுக் குழாய்களில் மூன்று முக்கியமான மாற்றங்கள் நிகழ்கின்றன:

★அழற்சி (Inflammation) - சுவாசக் குழாய்களின் உள் சுவர்களில் வீக்கம் ஏற்படுதல்.

★மூச்சுக்குழாய் சுருக்கம் (Bronchospasm) - மூச்சுக் குழாய்களைச் சுற்றியுள்ள தசைகள் திடீரென சுருங்குதல்.

★அதிக சளி உற்பத்தி (Mucus hypersecretion) - மூச்சுக் குழாய்களில் சளி அடைப்பு ஏற்படுதல்.

★இந்தக் காரணங்களால் காற்றோட்டம் குறைந்து, நோயாளிக்கு மூச்சுத்திணறல் ஏற்படும்.

அறிகுறிகள்

★அடிக்கடி இருமல் (குறிப்பாக இரவு அல்லது அதிகாலை நேரங்களில்)

★மார்பு இறுக்கம்

★மூச்சுத்திணறல்

★மூச்சு விடும்போது விசில் சத்தம் (wheezing)

★சளியுடன் கூடிய இருமல்

★இந்த அறிகுறிகள் மாறுபடும் தன்மை கொண்டவை. ஒரே நோயாளியிடம் சில நாட்களில் இல்லாமல் போய், மறுநாள் அதிகரிக்கக்கூடும்.

வகைகள்

★ஒவ்வாமை ஆஸ்துமா (Allergic Asthma) - தூசி, பூந்தூள், செல்லப்பிராணிகளின் முடி போன்ற ஒவ்வாமைப் பொருட்களால் தூண்டப்படுவது.

★ஒவ்வாமை அல்லாத ஆஸ்துமா (Non-&allergic Asthma) - மன அழுத்தம், குளிர் அல்லது தொற்று போன்ற காரணிகளால் தூண்டப்படுவது.

★உடற்பயிற்சியால் தூண்டப்படும் ஆஸ்துமா (Exercise&induced Asthma) - உடற்பயிற்சியின்போது ஏற்படும் ஆஸ்துமா.

★தொழில்சார் ஆஸ்துமா (Occupational Asthma) - வேலை செய்யும் இடங்களில் உள்ள இரசாயனங்கள் அல்லது புகை காரணமாக ஏற்படுவது.

★கடுமையான தொடர் ஆஸ்துமா (Severe persistent Asthma) & அடிக்கடி தாக்கும், தொடர் மருந்துகள் அவசியம்.

நோய் கண்டறிதல் (Diagnosis)

★ஆஸ்துமாஒருமருத்துவப்பரிசோதனை கண்டறிதல் (clinical diagnosis) ஆகும். மருத்துவர், அறிகுறிகள் மற்றும் சில பரிசோதனைகளின் அடிப்படையில் கண்டறிவார்.

★ஸ்பைரோமெட்ரி (Spirometry) - நுரையீரலில் இருந்து வெளியேற்றப்படும் காற்றின் அளவை அளவிடுதல் (ஊஉஙப1, ஊஙஇ).

★பீக்ஃப்ளோமீட்டர் (Peak flow meter) - சுவாசத்தின் வேகத்தை கண்காணிக்கப் பயன்படுவது.

★ஒவ்வாமை சோதனைகள் (Allergy tests) - எந்தப் பொருட்கள் ஆஸ்துமாவைத் தூண்டுகின்றன என்பதைக் கண்டறிய.

★மார்பு எக்ஸ்-ரே - மற்ற நோய்களைத் தவிர்ப்பதற்காக.

சிகிச்சைமுறைகள்

ஆஸ்துமாவை முற்றிலும் குணப்படுத்த முடியாது. ஆனால் மருத்துவர் ஆலோசனையுடன் முறையான சிகிச்சை சமூலம் நல்ல கட்டுப்பாடு பெற முடியும்.

இன்ஹேலர்கள் (Inhalers) (மூச்சுக் கருவி மருந்துகள்)

உடனடி நிவாரணிகள் (Relievers) (Short&acting bronchodilators) & ஆஸ்துமா தாக்குதலின்போது உடனடி நிவாரணம் அளிப்பவை (எ.கா: சால்புடமால்-Salbutamol).

கட்டுப்பாட்டு மருந்துகள் (Controllers) (Inhaled corticosteroids, Long&acting bronchodilators) - நீண்ட கால கட்டுப்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படுபவை.

வாய்வழி மருந்துகள் (Oral medications)

லுகோட்ரைன் ஏற்பு எதிர்ப்பிகள் (Leukotriene receptor antagonists) (எ.கா: மாண்டெலுகாஸ்ட் - Montelukast)

தியோஃபிலின் (Theophylline) (அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை)

ஒவ்வாமைப் பொருட்களைத் தவிர்த்தல் (Allergen avoidance) - தூசி, புகை, செல்லப்பிராணிகளின் முடி போன்றவற்றைத் தவிர்ப்பது.

வாழ்க்கை முறை மாற்றங்கள்

உடல் எடையைக் குறைத்தல்

மருத்துவரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சி செய்தல்

புகைப்பிடிப்பதை நிறுத்துதல்

ஆஸ்துமா தாக்குதல் (Asthma attack)

திடீர் தாக்குதலின் போது:

கடுமையான மூச்சுத்திணறல்

பேச முடியாமை

உதடுகள் நீல நிறமாதல் (cyanosis)

உடனடி அவசர மருத்துவ சிகிச்சை அவசியம்.

சிகிச்சை - மருத்துவமனையில் நெபுலைசர் மூலம் மூச்சுக்குழாய் விரிப்பான்கள் (bronchodilators), ஸ்டீராய்டுகள் மற்றும் சில நேரங்களில் ஆக்சிஜன் வழங்கப்படும்.

ஆஸ்துமா கட்டுப்பாட்டு நிலைகள்

மருத்துவரின் வழிகாட்டுதலின்படி, நோயாளிகள் பின்வரும் நிலைகளை மதிப்பீடு செய்யலாம்:

நல்ல கட்டுப்பாடு (Well controlled) - வாரத்திற்கு 2 முறைக்குக் குறைவாக அறிகுறிகள் தோன்றுவது.

ஓரளவு கட்டுப்பாடு (Partly controlled) & வாரத்திற்கு பலமுறை அறிகுறிகள் தோன்றுவது.

கட்டுப்பாடற்ற நிலை (Uncontrolled) - தினமும் அறிகுறிகள் தோன்றுவது, இரவில் எழுதல்.

தடுப்பு நடவடிக்கைகள்

வீட்டு தூசி மற்றும் புகை போன்றவற்றைத் தவிர்த்தல்.

குளிர் காலங்களில் முகக்கவசம் பயன்படுத்துதல்.

மருந்துகளை மருத்துவ ஆலோசனையுடன் முறையாக எடுத்துக்கொள்ளுதல், வருடாந்திர இன்ஃப்ளுயன்சா தடுப்பூசி (Flu vaccine) போட்டுக்கொள்ளுதல்.

சமூக மற்றும் உளவியல் தாக்கம்

ஆஸ்துமா குழந்தைகளில் பள்ளிப் படிப்பை பாதிக்கலாம். பெரியவர்களில் வேலைக்குச் செல்ல முடியாமை, மன அழுத்தம் போன்றவை அதிகரிக்கலாம். எனவே, நோயாளிகளுக்கு உளவியல் ஆதரவு மற்றும் விழிப்புணர்வு மிகவும் அவசியம்.

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் நிலைமை

இந்தியாவில் சுமார் 3-5% மக்கள் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காற்று மாசுபாடு, புகை மற்றும் தூசி ஆகியவை முக்கிய காரணிகள்.

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் இதன் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

தமிழக அரசு மருத்துவமனைகளின் மூலமாக ஆஸ்துமா சிகிச்சை மற்றும் அரசு சுகாதாரத்துறை மூலம் ஆஸ்துமா விழிப்புணர்வு திட்டங்கள் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன.

முடிவுரை

ஆஸ்துமா ஒரு நாள்பட்ட நோய் என்பதால் நோயாளியும், குடும்பத்தினரும் நோய் கண்டறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பு குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். சரியான மருத்துவ ஆலோசனையில் மருந்துகளை எடுத்துக்கொண்டு, நோய் தூண்டுதல்களைத் தவிர்த்து, மருத்துவரின் ஆலோசனைப்படி வாழ்ந்தால் ஆஸ்துமாவை முழுமையாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

# ரஞ்சி கோப்பை கிரிக்கெட்: தமிழக அணி இன்னிங்ஸ் வெற்றி

சண்டிகர்: ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில் தமிழ்நாடு & சண்டிகர் அணிகள் இடையிலான போட்டி சண்டிகரில் உள்ள செக்டார் 16 மைதானத்தில் நடைபெற்று வந்தது. இதன்முதல்இன்னிங்ஸில் தமிழக அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 571 ரன்கள் குவித்து டிக்ளோர் செய்தது. பிரதோஷ் ரஞ்ஜன் பால் 208, அஜித் ராம் 115 ரன்கள் விளாசினர்.



இதையடுத்துவிளையாடிய சண்டிகர் அணி 37.3 ஓவர்களில் 94 ரன்களுக்கு ஆட்டமிழந்து பாலோ&ஆன் ஆனது. பாலோ&ஆன் பெற்ற சண்டிகர் அணி 477 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2&வது இன்னிங்ஸை விளையாடிய நிலையில் 3&வது நாள் ஆட்டத்தின் முடிவில் 57 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 189 ரன்கள் எடுத்திருந்தது.

அதிகபட்சமாக அர்ஜுன் ஆசாத் 60, கேப்டன் மனன் வோரா 59 ரன்கள் சேர்த்தனர். நிகில் சர்மா 13, ரோஹித் தண்டா ஒரு ரன்னுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய சண்டிகர் அணி 64.5 ஓவர்களில் 218 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. ரோஹித் தண்டா 1, நிகில் சர்மா 16, ஜக்ஜித் சிங் 15 ரன்கள் சேர்த்து வெளியேறினர். தமிழக அணி தரப்பில் அஜித் ராம் 19.5 ஓவர்களை வீசி 5 மெய்டன்களுடன் 48 ரன்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்களை வீழ்த்தினார்.

கேப்டன் சாய் கிஷோர் 2 விக்கெட்களை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக முதல் இன்னிங்ஸில் இரட்டை சதம் விளாசிய பிரதோஷ் ரஞ்ஜன் பால் தேர்வானார். இன்னிங்ஸ் மற்றும் 259 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதமிழகஅணிபோனஸ் புள்ளியுடன் 7 புள்ளிகளை பெற்றது.

'டி' பிரிவில் இடம் பெற்றுள்ள தமிழக அணிக்கு இது 3&வது வெற்றியாக அமைந்தது. 4 ஆட்டங்களில் விளையாடி உள்ள தமிழக அணி முதல் ஆட்டத்தை ராஜஸ்தானுக்கு எதிராக டிரா செய்திருந்தது. 2&வது ஆட்டத்தில் உத்தராகண்ட் அணியை இன்னிங்ஸ் மற்றும் 66 ரன்கள் வித்தியாசத்திலும், 3&வது ஆட்டத்தில் ரயில்வேஸ் அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்திலும் வீழ்த்தியிருந்தது.

# 2&வது டெஸ்ட் போட்டி: சதம் விளாசி அணியை மீட்டார் அமிர் ஜாங்கூ

சில்ஹெட்: மேற்கு இந்தியத் தீவுகள் & வங்கதேசம் அணிகள் இடையிலான 2&வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சில்ஹெட் நகரில் நேற்று தொடங்கியது. டாஸ் வென்று பேட் செய்த மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு தொடக்கம் அதிர்ச்சியாக இருந்தது. தொடக்க வீரர்களான பிரண்டன் கிங் 9, ஜோஸ்வா டி சில்வா 12 ரன்களில் தஸ்கின் அகமது பந்தில் ஆட்டமிழந்தனர்.



கவேம் ஹாட்ஜ் 1 ரன்னில் ஹசன்மஹ்மூத்பந்தில்போல்டானார். 27 ரன்களுக்கு 3 விக்கெட்களை இழந்த நிலையில் அறிமுக வீரரான கெவின் விக்ஹாமுடன் இணைந்து பார்ட்னர்ஷிப்பைகட்டமைத்தார் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான அமிர் ஜாங்கூ. அபாரமாக விளையாடிய அமிர்ஜாங்கூ 149 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார். சர்வதேச டெஸ்ட் அரங்கில் இது அவரது 2&வது சதமாக அமைந்தது.

மறுமுனையில் நிதானமாக விளையாடி தனது முதல் அரைசதத்தை கடந்த கெவின் விக்ஹாம் 145 பந்துகளில், 5 பவுண்டரிகளுடன் 61 ரன்கள் எடுத்த நிலையில் ஹசன் மஹ்மூத்பந்தில்ஆட்டமிழந்தார். 4&வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 131 ரன்கள் சேர்த்தது. இதையடுத்து ஜஸ்டின் கிரீவ்ஸ் களமிறங்கினார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி 70 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 235 ரன்கள் எடுத்திருந்த போது போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தால் முதல் நாள்ஆட்டம்முடித்துக்கொளளப்பட்டது.

அமிர் ஜாங்கூ 111, ஜஸ்டின் கிரீவ்ஸ் 35 ரன்களுடன் களத்தில் இருந்தனர். இந்த ஜோடி5&வதுவிக்கெட்டுக்கு 19.5 ஓவர்களில் 77 ரன்கள் சேர்த்துள்ளது. கைவசம் 6 விக்கெட்கள் இருக்க மேற்கு இந்தியத் தீவுகள் அணி இன்று 2&வது நாள் ஆட்டத்தை எதிர்கொள்கிறது.

# சிஎஸ்கே & சன்ரைசர்ஸ் இடையே 4 வீரர்கள் பரிமாற்றம்

புதுடெல்லி: ஐபிஎல் 2027&ம் ஆண்டு சீசனுக்கான மினி ஏலம் வரும் டிசம்பர் 16&ம் தேதி கோவாவில் நடைபெற உள்ளது. இதையொட்டி வீரர்களை தக்க வைக்கும் நடவடிக்கையிலும், வெளியேற்றும் நடவடிக்கையிலும், டிரேடிங் முறையில் மாற்றிக்கொள்ளும் முறையிலும் அணிகளின் உரிமையாளர்கள் களமிறங்கி உள்ளனர்.





வீரர்கள் தக்கவைப்புக்கான காலக்கெடு வரும் 17&ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் மினி ஏலத்துக்கு முன்னதாக சென்னை சூப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் இடையே 4 வீரர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சீசனில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் இடம் பெற்றிருந்த இங்கிலாந்து ஆல்ரவுண்டர் லியாம் லிவிங்ஸ்டன், ஆஸ்திரேலிய ஆல்ரவுண்டர் ஜாக் எட்வர்ட்ஸ் ஆகியோர் சிஎஸ்கே அணியில் இணைந்துள்ளனர்.

இவர்களுக்கு மாற்றாக சிஎஸ்கே அணியில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் கலீல் அகமது, ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் நேதன் எல்லிஸ் ஆகியோர் சன்ரைசர்ஸ் அணிக்கு மாறியுள்ளனர்.

லிவிங்ஸ்டனை ரூ.13 கோடிக்கு ஒப்பந்தம் செய்திருந்த சன்ரைசர்ஸ் அணி, தற்போது அவரை ரூ.6 கோடிக்கு சிஎஸ்கேவுக்கு வழங்கியுள்ளது.

ஜாக் எட்வர்ட்ஸ் தனது ரூ.3 கோடி ஒப்பந்தத் தொகையிலேயே சிஎஸ்கே அணியில் இணைந்துள்ளார். கலீல் அகமது ரூ.4.8 கோடி, நேதன் எல்லிஸ் ரூ.2 கோடி என்ற அவர்களது தற்போதைய ஒப்பந்தத் தொகையிலேயே சன்ரைசர்ஸ் அணிக்கு மாறியுள்ளனர்.

# ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி: 6&வது முறையாக இந்தியா சாம்பியன்



மொகாலி: ஆடவருக்கான ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி தொடர் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப் போட்டியில் நேற்று இந்தியா & ஜப்பான் அணிகள் மொகாலியில் மோதின. இதில் இந்திய அணி 4&1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

இந்திய அணி தரப்பில் ஷில்லானந்த் லக்ரா (41&வது நிமிடம்), தில்பிரீத் சிங் (47&வது நிமிடம்), ஜுக்ராஜ் சிங் (52&வது நிமிடம்), விவேக் சாகர்பிரசாத் (53&வது நிமிடம்) ஆகியோர்தலா ஒரு கோல் அடித்தனர்.

ஜப்பான் அணி சார்பில் ககுமாசா மாட்சுமோட்டோ 2&வது நிமிடத்தில் கோல் அடித்தார்.

ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி தொடரில் இந்திய அணி பட்டம் வெல்வது இது 6&வது முறையாகும்.

# ஜன. 14 முதல் டபிள்யூபிஎல் கிரிக்கெட்: பிசிசிஐ அறிவிப்பு



புதுடெல்லி: அடுத்த ஆண்டு ஜனவரி 14&ம் தேதி முதல் பிப்ரவரி 7&ம் தேதி வரை5&வது மகளிர்பிரீமியர்லீக் (டபிள்யூபிஎல்) கிரிக்கெட் போட்டி நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்துள்ளது.

போட்டியில் நடப்புச் சாம்பியன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, மும்பை இந்தியன்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், யு.பி.வாரியர்ஸ், டெல்லி கேபிட்டல்ஸ் ஆகிய 5 அணிகள் பங்கேற்கும். வதோதரா, மும்பை மைதானங்களில் தலா 11 ஆட்டங்கள் நடைபெறும்.

ஜனவரி 14&ம் தேதி தொடக்க ஆட்டம் வதோதரா மைதானத்தில் நடைபெறும். இந்தப் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு( ஆர்சிபி), மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் மோதும்.

வதோதராவில் ஜனவரி 24&ம் தேதி வரை நடைபெறும் லீக் போட்டிகள் நடைபெறும். அதன் பின்னர் மும்பை பிராபோர்ன் மைதானத்தில் எஞ்சிய லீக், பிளே&ஆப் போட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டியும் பிராபோர்ன் மைதானத்திலேயே நடைபெறும் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது.

# ராமாயணா: : விமர்சனம் & யஷ் ஆளுமையில் பிரம்மாண்ட காட்சி அனுபவம் எப்படி?



கடந்த 2023&ஆம் ஆண்டு ராமாயணத்தை தழுவி வெளியான 'ஆதிபுருஷ்' படத்தின் மிகப் பெரிய தோல்விக்குப் பிறகு சில நாட்களிலேயே மீண்டும் ராமாயணத்தை திரைப்படமாக உருவாக்கப் போவதாக அறிவிப்பு வெளியானது. அந்த அளவுக்கு இந்தியாவின் மிகப் பெரிய இதிகாசமான ராமாயணத்தை மோசமான கிராபிக்ஸ், ஆன்மா இல்லாததிரைக்கதை என 'ஆதிபுருஷ்' வழியே தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குதறி வைத்தது பாலிவுட். இப்படியான சூழலில் மிகப் பெரிய பொருட்செலவில், ஹாலிவுட் கிராபிக்ஸ் வல்லுநர்களின் பங்களிப்பில் நிதேஷ் திவாரி இயக்கத்தில் மிகப் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு இடையே வெளியாகியிருக்கிறது 'ராமாயணா: பாகம் 1' திரைப்படம்.

கதை ஏற்கெனவே இந்திய மக்களுக்கு பரிச்சயமானதுதான் என்றாலும், கதைகள், சீரியல், திரைப்படம், கார்ட்டூன் என பல வகைகளில் பார்த்திருந்தாலும், அதை மீண்டும் ஒருமுறை பிரம்மாண்டமாக டிஸ்னி, மார்வெல் படங்களில் மட்டுமே பார்த்து வியந்த தத்ரூப கிராபிக்ஸ் வழியே தந்து வெற்றி பெற்றிருக்கிறார் நிதேஷ் திவாரி.

உலகைக் காக்க விஷ்ணுவின் அவதாரமாக ராமன், பூமியில் பிறப்பது முதல், ராவணனால் கடத்தப்பட்ட சீதையை மீட்க ராமன் போருக்குத் தயாராகும் தருணம் வரை இந்த முதல் பாகம் விவரிக்கிறது.

இந்தப் பயணத்தில் பறக்கும் யானைகள், பாயும் காண்டாமிருகங்கள், சிறுத்தைகள்பூட்டிய தேர்கள் மற்றும் உருமாறும் அரக்கர்கள் என தொழில்நுட்பத்தின் அனைத்து மாயாஜாலங்களும் திரையில் அட்டகாசமாக கொண்டுவரப்பட்டுள்ளன.

கதையின்ராவணன்பகுதிக்குஅதிகமுக்கியத்துவம் கொடுத்தே கதையை தொடங்கியுள்ளார் இயக்குநர். குபேரனின் படையை ராவணன் வீழ்த்தும் தொடக்கக் காட்சியிலேயே அவரது ஆற்றல் நிறுவப்பட்டு, மிகப் பெரிய ஹைப் உருவாகிவிடுகிறது. அதன்பிறகு படம் முழுக்க ராவணனாகவரும்யஷ்ஷின்'ராவண'தாண்டவம்தான். 'டாக்ஸிக்' படத்தில் விட்டதை மனிதர் ஒட்டுமொத்தமாக இதில் பிடித்துவிட்டார். அவர் வரும் காட்சிகள் அனைத்திலும் விசில் பறக்கிறது.

ராமனாக வரும் ரன்பீர் கபூர், தனது சொந்த பிம்பம் கதாபாத்திரத்தை மறைத்துவிடாத வண்ணம் மிகவும் கட்டுப்பாடான, அமைதியான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ட்ரெய்லரின்போது சமூக வலைதளங்களில் வெளியான கேலிகளுக்கு பதிலளிக்கும் அவரது நடிப்பு மின்னுகிறது. கதாபாத்திரத்துக்குத்தேவையானசாந்தத்தையும், வீரியத்தையும் நேர்த்தியாகக் கொண்டுவந்துள்ளார்.

அதேபோல சமூக ஊடகங்களில் தென்னிந்திய நடிகை என்பதற்காகவும், உருவத்தை கொண்டும் கேலி, கிண்டலை எதிர்கொண்ட சாய் பல்லவியும் தனது நடிப்பால் அவற்றை உடைத்துள்ளார். ஆஹோ, ஓஹோ என்ற அளவுக்கான நடிப்பு என்று சொல்லமுடியாவிட்டாலும் தனது கதாபாத்திரத்தின் கனத்தை உணர்ந்து அதற்கு சிறப்பாகவே நியாயம் செய்துள்ளார். அனுமன் கதாபாத்திரத்துக்கு சன்னி தியோல் பெயரளவில் போஸ்ட் கிரெடிட் காட்சியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த பாகத்தில் அவர் திரையில் தோன்றவில்லை என்பது ஏமாற்றமே.

பங்கஜ் குமார் மற்றும் மகேஷ் லிமயேவின் ஒளிப்பதிவு, ஒவ்வொரு ஃப்ரேமையும் ஒரு கலைப் படைப்பாக மாற்றியுள்ளது. சர்வதேச பார்வையாளர்களுக்கு எளிதில் புரிய வேண்டும் என்பதற்காகவே, கதையின் ஒவ்வொரு சிறிய விவரமும் நேரடியாகவும், எந்தவொரு சிக்கல்களுமின்றியும் விவரிக்கப்பட்டுள்ளது சிறப்பு.

குறிப்பாக படத்தில் முதல் காட்சியிலிருந்தே வாய்ஸ் ஓவரில் தேவர்கள் vs அசுரர்கள் கதை சொல்லப்பட்ட விதமும் அதை தொடர்ந்து கதைக்குள் படம் நேரடியாக நுழைந்த விதமும் புத்திசாலித்தனமான ஐடியா. 'ஆதிபுருஷ்' தவறவிட்ட இடம் இங்கேதான்.

அடுத்து குறிப்பிட்டு பாராட்டப்பட வேண்டியது படத்தின் கிராபிக்ஸ் தொழில்நுட்பம். இதுவரை எந்த இந்திய திரைப்படத்திலும் இப்படியொரு நேர்த்தியான, நுணுக்கமான கிராபிக்ஸை பார்த்திருக்க முடியாது. 'நார்னியா', 'லார்ட் ஆஃப் தி ரிங்ஸ்' போன்ற படங்களில் இடம்பெறும் காட்சிகளுக்கு நிகரான தத்ரூபத்துடன் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ராவணனுக்கும் ஜடாயுக்கும் இடையிலான சண்டைக் காட்சி பெரிய திரையில் மட்டுமே கண்டு ரசிக்க வேண்டிய அற்புதம். அந்தக் காட்சியை ஆறரை ஆண்டுகள் உருவாக்கியதாக இயக்குநர் கூறியிருந்தார்.அதன்காரணம்அந்தக்காட்சியை பார்க்கும்போது புரிபடுகிறது.

ஹான்ஸ் ஸிம்மர் & ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசை, படத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்கின்றன. 'ஜெய் ஜெய் ராம்', 'மங்கள வண்ணமே' பாடல்கள் காதுகளுக்கு இனிமை.

இது ராமாயணத்தை உலக அரங்குக்குக் கொண்டு செல்லும் இந்தியாவில் முயற்சி என்றாலும், இந்தியர்களின் மனதுக்கு நெருக்கமான, மிகவும் பழக்கப்பட்ட இந்த கதையில் இருக்கும் உணர்வுபூர்வமும் ஆழமும் விஎஃப்எக்ஸ் என்ற ஆடம்பரத்துக்குள் தொலைந்துபோய்விட்டதோ என்ற கேள்வியும் எழுகிறது.

ஓவர்&தி&டாப் பிரம்மாண்டம், வியக்கவைக்கும் காட்சி அமைப்புகளும் தொடக்கத்தில் பிரமிக்க வைத்தாலும், போகப்போக ஒரு கட்டத்துக்கு மேல் திரைக்கதையின் தொய்வால் ஒருவித சலிப்பையே ஏற்படுத்துகின்றன.

இப்படம் ஒரு புராணக் காவியத்தை உலகத் தரத்திலான காட்சி அமைப்புகளோடு காட்சிப்படுத்தியிருக்கும் ஒரு பிரம்மாண்டமான தொழில்நுட்ப சாதனை என்பதில் மாற்றமில்லை. ஆனால், நுட்பமான உணர்வுகளையும், கதையின் அடிப்படையான தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையிலான மோதலை ஆழமாகப் பேசத் தவறி, பல இடங்களில் வெறும் மேலோட்டமான காட்சி ஜோடனையாக மட்டுமே நின்றுவிடுகிறது. இடைவேளைக்கு முன்பாக ராமர் வனவாசம் செல்லும் காட்சிகள் எல்லாம் ஒரு பெரிய பட்ஜெட் மெகா சீரியலைப் போல நீள்கின்றன.

யஷ்ஷின் திரை ஆளுமையும், கண்களைப் பறிக்கும் காட்சி அமைப்புகளும் பெரிய திரையில் பார்த்து ரசிக்கக்கூடிய அனுபவத்தைத் தந்தாலும், ராமாயணம் என்ற இதிகாசத்தை கிராபிக்ஸைதாண்டி, பார்வையாளர்களின் மனதில் ஆழமாக பதியவைக்கும்படி இன்னும் உணர்வுபூர்வமாக சொல்லி இருக்கலாம். எனினும் ஒரு திரைப்படத்துக்கு எது தேவையோ அந்த பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அதை முடிந்த அளவுக்கு சுவாரசியமாக சொல்லி இறுதியில் ஒரு நிறைவான உணர்வை தந்துவிடுகிறது 'ராமாயணா'

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
DAILY TAMIL
PUBLISHED FROM - CHENNA
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

This newspaper/periodical is published by VUPPALA SUJATHA from 82/5, MANNARSWAMY KOIL STREET, PULIANTHOPE, CHENNAI- 600012, TAMIL NADU on behalf of VUPPALA SUJATHA, 17-1-469/A/42/23, ADARSH NAGAR, NEAR UNIQUE GRAMAR SCHOOL, SAIDABAD, HYDERABAD -500059, TELANGANA, edited by H. MD. HARIEF and printed by BUCHI BABU. VUPPALA at THANMAYEE PRINTERS, NO. 7, 3RD STREET, KRISHNA NAGAR, MOOUARASAMPET, MADIPAKKAM, CHENNAI- 91, TAMIL NADU.TNTAM/2008/75087 Email :info.southindiatimes@gmail.com Phone :9000657700